அப்பளிப்பு
மற்றும்
சகலவிதமான
பொருள்களுக்கும்
குறிஞ்சி
மெடிக்கல்ஸ்
பரமேஸ்வரா சந்தி
திருநெல்வேலி
(எமக்கு வேறு
கிளைகள் இல்லை)
(32213)

பக்கங்கள்: ஆறு

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5-00

ஆங்கில மருந்து வகைகள்
குழந்தைகளுக்கான
பால்மா வகைகளுக்கு
குறிஞ்சி
மெடிக்கல்ஸ்
பரமேஸ்வரா சந்தி
திருநெல்வேலி
(எமக்கு வேறு
கிளைகள் இல்லை)
(32213)

சுடர் 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆடி 18 புதன்கிழமை (03 08 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 248

# பலாலி விமானத் தளத்துக்குள் ஊடுருவி தாக்குதல்

# ஹெலியையும் பவளையும் கரும்புலிகள் அழித்தனர்

## 2 மணி நேரம் கடும் சண்டை படையினருக்குப் பேரிழப்பு

யாழ்ப்பாணம், ஓக, 3

வடபகுதியில் ஸ்ரீலங்கா இராணுவத்தின் மிகப் பலம் வாய்ந்த பலாலி விமானத் தளத்துக்குள் ஊடுருவி கரும்புலிகள் நேற்று அதிகாலை துணிகரத் தாக்குதல் ஒன்றை நடத்தினர்.

தளத்தின் மையப் பகுதிவரை முன்னேறி கரும்புலிகள் நடத்திய தாக்குதலில் "பெல்" ரக ஹெலிக்கொப்டர் ஒன்று வெடித்து, சிதறி, தீப்பிடித்து, எரிந்து முற்றாக நாசமாகியது; விமானப் படைத்தளத்தில் நடைபெற்ற கடும் சண்டையில் பவள் கவச வாகனம் ஒன்றை கரும்புலிகள் அழித்தனர்; இத்தாக்குதலில் விமானப் படைக்கும் இராணுவத்திற்கும் பேரிழப்பு ஏற்பட்டது.

படையினரின் பலம்வாய்ந்த அரண்களைக் கடந்து ஊடுருவிச் சென்ற கரும்புலிகள், நேற்று அதிகாலை 2-30 மணிக்கு படையினர் மீதான தாக்குதலை ஆரம்பித்தனர் என்று கூறப்பட்டது.

விமானத் தரிப்பிடப் பகுதி வரை முன்னேறிய புலிகள் சிறிய ரக தானியங்கி ஆயுதங்களாலும், "லோ" வகை ஷெல்கள் மூலம் தாக்குதலை மேற்கொண்டனர்.

விமானத்தளத்தில் தரித்து நின்ற ஹெலிக்கொப்டரை 'லோ' வகை ஷெல்கள் மூலம் கரும்புலிகள் தாக்கிய போது ஹெலிக்கொப்டர் வெடித்து தீப்பற்றி எரிந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

விமானப் படையினர் பயன்படுத்திய 'பவள்' கவச வாகனம் ஒன்றையும் கரும்புலிகள் நாசமாக்கினர்.

விமானப் படைத் தளத்துக்குள் இரண்டு மணி நேரம் உக்கிரச் சண்டை நடைபெற்றதாக ஸ்ரீலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இத்தாக்குதலில் பல இராணுவத்தினரும், விமானப் படையினரும் கொல்லப்பட்டதாகக் கருதப்படுகிறது.

ஆனால் உயிரிழந்த படையினரின் எண்ணிக்கை குறித்து சரியான விவரங்கள் இச்செய்தி எழுதப்படும் வரை தெரியவரவில்லை.

ஆனால் விமானப் படைச் சிப்பாய் ஒருவர் பலியானதாகவும் இருவர் காயமுற்றதாகவும் ஸ்ரீலங்கா பாதுகாப்பு வட்டாரங்களில் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

(உ)

## 2 குழுக்களில் 20 கரும்புலிகள் ஞாயிறு இரவே ஊடுருவினர்!

### திங்கள் முன்னிரவிலேயே மோதல் ஆரம்பம்

கரும்புலிகள் எனப்படும் தற்கொலைத் தாக்குதல் படைப் பிரிவைச் சேர்ந்த இரண்டு குழுக்கள் கடந்த ஞாயிறு இரவே பலாலி விமானத் தளத்துக்குள் ஊடுருவியிருந்தனர் என்று பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்களை மேற்கோள்காட்டி இலங்கை வானொலி அறிவித்தது.

சுமார் இருபதுக்கும் அதிகமான, கரும்புலிகள் இரவில் பார்க்க கூடிய நவீன உபகரணங்கள் மற்றும் கனரக ஆயுதங்கள் தரித்தபடி விமானத் தளத்துக்குள் ஊடுருவினர் என்றும் —

நேற்று முன்தினம் (திங்கள் இரவு) 9 மணியளவில் படையினருடன் முதல் தடவையாக மோதிய பின்னர் மேலும் பல குழுக்களாகப் பிரிந்து தாக்குதலை நடத்தினர் என்றும் —

நேற்று அதிகாலை வரை தாக்குதல் தொடர்ந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

(உ-3)

## விமானத்தள பாதுகாப்புக்கு தொடர்ந்து அச்சுறுத்தலாம்!

பலாலி முகாமுக்குள் ஊடுருவியுள்ள கரும்புலிகளினால் விமானத் தளத்தின் பாதுகாப்புக்கு தொடர்ந்தும் அச்சுறுத்தல் இருப்பதாகக் கூறப்படுகிறது.

தளத்தின் பாதுகாப்புக்கு ஏற்பட்டுள்ள பயமுறுத்தல் இன்னும் முற்றாக நீங்கவில்லை என்று பாதுகாப்பு அமைச்சு விடுத்துள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டிருப்பதாக இலங்கை வானொலி அறிவித்தது.

விமானத் தளப் பாதுகாப்பு நிலைமை குறித்து அடுத்த 24 மணி நேரத்தில் மதிப்பீடு செய்யப்பட்டு முடிவுகள் மேற்கொள்ளப்படும் என பாதுகாப்பு அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

## பத்து கரும்புலிகள் உள்ளே தயார் நிலையில் உள்ளனராம்

பலாலி விமானத் தளத்துக்குள் ஊடுருவியுள்ள கரும்புலிகளின் குழுக்களைச் சேர்ந்த மேலும் பத்துப் பேர் விமானத் தளத்துக்குள் தயார் நிலையில் இருப்பதாகக் கூறப்படுகிறது.

சுமார் முப்பது சதுரக் கிலோமீற்றர் விஸ்தீரணத்தைக் கொண்ட பலாலி விமானத் தளத்துக்குள் கரும்புலிகள் பத்துப் பேர் வரை இன்னும் இருக்கக் கூடும் என பாதுகாப்பு வட்டாரங்கள் கருதுவதாக ஸ்ரீலங்கா அரச செய்தி நிறுவனங்கள் தகவல் வெளியிட்டன.

விமானத் தளத்துக்குள் ஊடுருவிய கரும்புலிகள் அதி நவீன ஆயுதங்களை வைத்திருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

விமானத் தளத்திற்குள் ஊடுருவியிருக்கும் கரும்புலிகளைக் கண்டுபிடிக்க தேடுதல் நடவடிக்கைகள் இடம்பெறுவதாக பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமை அலுவலக அதிகாரி பிரிகேடியர் கெமுனு குலதுங்க தெரிவித்தார்.

## அரச மற்றும் பாதுகாப்பு வட்டாரங்களில் பேரதிர்ச்சி

பலாலி விமானப்படைத் தளத்துக்குள் கரும்புலிகள் ஊடுருவித் தாக்குதல் நடத்தியிருப்பது அரச மற்றும் பாதுகாப்பு வட்டாரங்களில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருப்பதாக செய்தி ஏஜென்சிகள் குறிப்பிட்டுள்ளன.

ஸ்ரீலங்காவில் தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கும் வேளையில் புலிகள் மேற்கொண்ட இந்த வெற்றிகரத் தாக்குதல் ஸ்ரீலங்கா அரசுக்கு பேரதிர்ச்சியைக் கொடுத்திருக்கிறது.

வட பகுதியில் உள்ள மிகவும் பாதுகாப்பான கூட்டுப்படைத் தளத்தினுள் உள்ள விமானப்படைத் தளத்துக்குள் கரும்புலிகள் ஊடுருவியமை பாதுகாப்பு அமைச்சை திகைப்பில் ஆழ்த்தியிருக்கிறது.

(உ-3)

### கரும்புலிகள் விவரம் பின்னர் அறிவிப்பு

பலாலி விமானப் படைத் தளத்துக்குள் ஊடுருவி வெற்றிகரத் தாக்குதலை மேற்கொண்ட கரும்புலிகள் தொடர்பான விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும் என நேற்று மாலையில் தெரிவிக்கப்பட்டது.

### பெல் ரக ஹெலி அழிக்கப்பட்டது

கரும்புலிகளின் தாக்குதலில் அழிக்கப்பட்ட "பெல்" ரக ஹெலிக்கொப்டர் விமானி உட்பட 15 பேரை ஏற்றிச் செல்லக்கூடியது; 4 5 மீற்றர் உயரமும், 17.6 மீற்றர் நீளமும், 2 75 மீற்றர் அகலமும் உடையது; நான்கு கதவுகளையும் நெருக்கடி காலத்தில் வெளியேறுவதற்கான வழிகளையும் கொண்டது.

### குண்டு வீச்சு விமானங்கள் தப்பி ஓட்டம்

விடுதலைப் புலிகள் பலாலி தளத்துக்குள் ஊடுருவித் தாக்குதலை ஆரம்பித்ததும் விமானத் தளத்தில் தரித்து நின்ற இரண்டு குண்டு வீச்சு விமானங்கள் தப்பி ஓடி பறந்து சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

[உ]

### சர்வதேச செய்தி சேவைகளில் முக்கியத்துவம்

பலாலி விமானத் தளத்துக்குள் ஊடுருவி விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலை சர்வதேச வானொலி சேவைகள் மற்றும் செய்தி சேவைகள் முக்கிய இடம் கொடுத்து அறிவித்தன.

### தாக்குதலின் பின் தீவிர கண்காணிப்பு

விடுதலைப் புலிகள் ஊடுருவித் தாக்க ஆரம்பித்ததை அடுத்து பலாலி விமானத் தளத்தைச் சுற்றி தீவிர கண்காணிப்பு மேற்கொள்ளப்படுவதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்தது.

தளத்தைச் சுற்றியுள்ள பாதுகாப்பு நிலைகள் பலப்படுத்தப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது

### முச்சந்தி முனி



சிங்கத்தை குகைக்குள்ள சந்திக்கிற சாதனை பாருங்கோ...!

### கிளாலி - பூநகரி படகுச் சேவை

யாழ்ப்பாணம், ஓக. 3

கிளாலி — பூநகரி படகுச் சேவை இன்று புதன்கிழமை வழமைபோல் [illegible] துறைப்பகுதி [illegible] அறிவித்துள்ளார்.

(ஓ-3)

## கடல் மார்க்கமாக ஊடுருவி 2 மைல் தூரம் முன்னேறினர்

விடுதலைப் புலிகளின் கரும்புலிகள் கடல் மார்க்கமாகவே பலாலிக்குள் பிரவேசித்திருக்கக் கூடும் என்று பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமை அலுவலக அதிகாரி பிரிகேடியர் கெமுனு குலதுங்க தெரிவித்தார்.

விமானங்கள் தரித்து நிற்கும் - விமானத் தளத்தின் மையப் பகுதி வரை - கரும்புலிகள் முன்னேறியிருப்பதால் ஆகக்குறைந்தது இரண்டு மைல் தூரமாவது படையினரின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் அவர்கள் ஊடுருவியிருக்கிறார்கள் என்பது திண்ணம் என்று சுட்டிக்காட்டப்பட்டது.

சிறிய ஆயுதங்கள், றொக்கட் செலுத்திகள், சிறிய பீரங்கிகள் சகிதம் அவர்கள் முன்னேறியிருப்பதாக பிரிகேடியர் குலதுங்க மேலும் தெரிவித்தார்.

## இராணுவ, விமானப்படை தளபதிகள் பலாலி விரைவு

பலாலி விமானத் தளத்துக்குள் ஊடுருவி விடுதலைப் புலிகள் துணிகரத் தாக்குதலை நடத்தியதை அடுத்து —

இராணுவப் படைத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜெரிடி சில்வா, விமானப் படைத் தளபதி ஏயர் மார்ஷல் ஒலிவர் ரணசிங்க ஆகியோர் உடனடியாக பலாலிக்கு விரைந்தனர்.

அவர்கள் தாக்குதல் நடைபெற்ற விமானத்தளப் பகுதியை நேரில் பார்வையிட்டதாகவும் —

அங்கு பாதுகாப்பைப் பலப்படுத்த எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து, அங்குள்ள அதிகாரிகளுடன் உரையாடியதாகவும் இலங்கை வானொலி அறிவித்தது.

தளபதிகளின் வருகையை அடுத்து விமானத் தளத்தின் பாதுகாப்பு மேலும் பலப்படுத்தப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது.

## பலாலி தலைமையகத்தை அழிப்பதே ஊடுருவல் திட்டம்

பாதுகாப்பு படையினரின் வடபகுதியில் உள்ள பிரதான தலைமையகத்தை தாக்கி அழிக்கும் நோக்கத்துடனேயே விடுதலைப் புலிகள் பலாலி இராணுவ முகாமுக்குள் ஊடுருவினர் என்று பாதுகாப்பு அமைச்சு கருத்து வெளியிட்டுள்ளது.

ஸ்ரீலங்கா பாதுகாப்புப் படைகளின் வடபகுதியில் உள்ள முக்கிய தளமாக பலாலி விளங்குவது குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணத்தில் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசத்தில் குழப்ப நிலையை ஏற்படுத்தி, அங்கு பொதுத்தேர்தலை நடத்துவதற்கு செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகளை சீர்குலைப்பதும் புலிகளின் நோக்கமாக இருந்திருக்கக் கூடும் என்றும் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்களை மேற்கோள் காட்டி இலங்கை வானொலி அறிவித்தது.

(உ-3)

## பலாலி படை முகாம் சூழலில் குண்டு வீச்சு! ஷெல் தாக்குதல்!!

நேற்று அதிகாலை புலிகள் ஊடுருவித் தாக்குதலை நடத்தியதை அடுத்து, பலாலி விமானப்படைத் தளத்தைச் சூழவுள்ள பிரதேசத்தில் கடும் விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்கள் இடம்பெற்றன.

விடியும் வேளையில் பலாலி விமானப் படைத் தளத்தைச் சுற்றி வட்டமிட்ட இரண்டு புக்காரா விமானங்கள் மாறி மாறி குண்டு வீச்சுத் தாக்குதலை மேற்கொண்டன.

ஹெலிக்கொப்டர் ஒன்றும் வேட்டு வைத்தது. ஷெல் தாக்குதல்களும் இடம்பெற்றன

முகாமைச் சூழவுள்ள பகுதிகளில் இடம்பெற்ற இத்தாக்குதல்களினால் ஏற்பட்ட சேத விவரங்கள் தெரியவரவில்லை

இத்தாக்குதல்களினால் வலிகாமம் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் நேற்றுக் காலை பெரும் பதற்றம் நிலவியது.

## வடமராட்சிப் பகுதியை நோக்கி நேற்று அதிகாலை ஷெல்வீச்சு

### விமானங்கள் வட்டமிட்டதால் மக்கள் பதற்றம்

வல்வெட்டித்துறை, ஓக. 3

பலாலி முகாமில் இருந்து நேற்று அதிகாலை 2 30 மணிக்கு பின்னர் வடமராட்சிப் பகுதியை நோக்கி கடுமையான ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது அதே சமயம் கடற்படைக் கப்பலில் இருந்து பீரங்கித் தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டது. ஹெலி ஒன்று சுவிபர் தாக்குதலை நடத்தியது.

அதிகாலை முதல் வடமராட்சிப் பகுதிக்கு மேல் இரு பொம்மர்களும் புக்காரா விமானமும், ஹெலிகளும் தொடர்ந்து பறந்தபடி இருந்தன இதனால் மக்கள் பெரும் பீதியுடன் இரவைக் கழித்தனர்.

வல்வெட்டித்துறை ஆதிகோயிலடி, ஊரிக்காடு, மயிலிட்டி, பொலிகண்டி, காட்டுப்புலம், தொண்டமானாறு பகுதிகளில் ஷெல் குண்டுகள் விழுந்து வெடித்தன.

அநேக குண்டுகள் பரங்கியில் மோதி வெடித்ததாலும், கடலில் விழுந்து வெடித்ததாலும் உயிரிழப்புகள் தவிர்க்கப்பட்டன எனினும் கரையோரப் பகுதி குடியிருப்புகள் பல சேதமடைந்தன

நேற்று நண்பகல் 11 45 மணியளவில் ஹெலி ஒன்று ஊரிக்காடு, தொண்டமானாறு பகுதிகளில் ஷெல் தாக்குதலை நடத்தியது. கடலில் இருந்து பீரங்கித் தாக்குதல்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### நேற்று அதிகாலை முதல்

## இரைச்சலுடன் பறந்த ஹெலி, விமானங்கள்!

பலாலி முகாம் மீதான தாக்குதலை தொடர்ந்து நேற்று அதிகாலை முதல் குடாநாட்டு வான் பிராந்தியங்களில் விமானங்கள் இரைச்சலுடன் பறந்தபடி இருந்தன ஹெலிகளும் அடிக்கடி பறந்து திரிந்தன.

இதனால் குடாநாட்டின் பல பகுதிகளிலும் பதற்ற நிலை காணப்பட்டது காலை வேளை பிரதான வீதிகளில் வாகனங்களின் ஓட்டமும் குறைந்து காணப்பட்டது.

நேற்று அதிகாலை 2.30 மணியளவில் ஆரம்பமான புக்காரா, ஹெலி, பொம்மர்களின் வான் வழி கண்காணிப்பு நேற்றுக் காலை 8 மணிவரை தொடர்ந்தது.

அதிகாலை வேளை ஒளி வீசிய வண்ணம் விமானங்கள் வட்டமிட்டன.

நேற்றுப் பகல் வேளையும் விமானங்கள் மற்றும் ஹெலிகள் அடிக்கடி பறந்த வண்ணம் இருந்தன.

(9-155-178)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவித்தல்

### எவர்விஷன்

முன்பு அறிவித்தது போன்று எம்மிடம் திருத்துவதற்கு ஒப்படைத்த T. V. டெக் போன்றவற்றை இம் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்பு திருப்பி எடுத்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம். அதிக நாட்கள் எடுக்கப்படாத பொருள்களுக்கு நாங்கள் பொறுப்பேற்க முடியாது என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எவர்விஷன்
21, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/8655)



## கண்ணீர் அஞ்சலி

### அமரர் கதிர்காமன் தேவாமிர்தசுந்தரம்

(இ. மி. ச. மின் அத்தியட்சகர்
காங்கேசன்துறை, சுன்னாகம் பணிமனைகள்)

எமது பணிமனையில் சில வருடகாலம் மின் அத்தியட்சகராகத் திறம்படக் கடமையாற்றி 2 - 8 - 1994 அன்று எம்மையெல்லாம் ஆறாத் துயரில் ஆழ்த்தி விட்டு இறைவனடி சேர்ந்த தேவாமிர்தசுந்தரம் அவர்கட்கு எமது ஆழ்ந்த துக்கத்தையும் கண்ணீர் அஞ்சலியையும் காணிக்கையாக்குகிறோம்.

இலங்கை மின்சார சபை
நலன்புரிச் சங்கம்
சுன்னாகம், காங்கேசன்துறை.

[7286]



## கண்ணீர் அஞ்சலி

### அமரர் க. தேவாமிர்தசுந்தரம்

(வித்துவான்)
(மின் அத்தியட்சகர், இலங்கை மின்சாரசபை
சுன்னாகம்)

சேவிகு தேவாமிர்தசுந்தரம்
சித்திரமாய்ப் போனாரென
ஓலமிட்டு அழுகின்ற
உள்ளங்கள் எத்தனைபோ
கோலக் குலமகனே!
பொற்றவனே! உன் இழப்பு
காலத்தால் கரைந்திடுமோ!
கண்ணீரால் அழிந்திடுமோ!
நோயில் நீர் கிடந்து
பாயில் படுத்திருந்தால்
கோயில் தெய்வத்தைக்
கூட்டிவந்து காத்திருப்போம்
வாயில் ஒரு வார்த்தை
வருவதற்கு முன்னாலே
மாயம் நடந்ததுவோ
மையிருட்டு சூழ்ந்ததுவோ

அன்னாரின் பிரிவினால் துயருறும் மனைவி, பிள்ளைகள், உறவினர்கள், நண்பர்கள் யாவருக்கும் எங்கள் இதயபூர்வமான அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தி அடைவதாக


மின் பொறியியலாளரும்,
யாழ். பிரதேச ஊழியர்களும்.

இலங்கை மின்சார சபை,
சுன்னாகம்.

(32216)



## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி விசாலாட்சி கந்தையா

மலர்வு: 20-02 1922
மறைவு 04-07-1994

திதி: 03-08-1994

பெற்றே வளர்த்தாய் பெருமகிழ்வோடு இப்பேருலகில் சுற்றே தரித்திலை சாருடன் விட்டிங்கள் நனையால் உற்றே மருகிரால் செங்குறை போக்கிய உத்தமியே சென்றே உறைந்திட்டா சிவனடி என்று தான் வந்திடுவீர் இங்கே.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

மக்கள், மருமக்கள்,
சகோதரர்.

பா. காசிநாதன்
50/30, செட்டித்தெரு,
நல்லூர்.

(32220)


பாகிஸ்தானுக்கு உளவு:

# இந்திய பாதுகாப்பு அமைச்சு அதிகாரிக்கு 14 வருட சிறை

பாகிஸ்தானுக்கு உளவு பார்த்த இந்திய பாதுகாப்பு அமைச்சைச் சேர்ந்த அதிகாரி ஒருவருக்கு புதுடில்லி நீதிமன்றம் ஒன்று 14 வருட சிறைத் தண்டனை விதித்தது.

இந்தியாவின் பாதுகாப்பு ரகசியங்கள் அடங்கிய இரகசிய தஸ்தாவேஜ் ஒன்றை புதுடில்லியிலுள்ள பாகிஸ்தான் தூதரகத்தைச் சேர்ந்த எழுதுவினைஞரிடம் ஒப்படைத்ததாக இந்தியப் பாதுகாப்பு அதிகாரியான எஸ். பி. பஸ்ரா என்பவர் மீது குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது. வழக்கு விசாரணை முடிவில் அவர் குற்றவாளியாகக் காணப்பட்டார்.

# அஷ்ரப் புத்திசாலி என்கிறார் காமினி

கொழும்பு, ஓக. 3

கிழக்குமாகாணத்தில் உள்ள அரசியல்வாதிகளுடன் ஒப்பிடுகையில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் மிகுந்த புத்திக் கூர்மையுள்ளவர். இது எனது தனிப்பட்ட கருத்து.

அமைச்சர் காமினி திஸநாயக்கா முன்கண்டவாறு கூறினார்.

கிழக்குமாகாணத்தில் தமது கட்சியில் ஐ. தே. க. வேட்பாளர்கள் போட்டியிட வேண்டும் என்று அஷ்ரப் கேட்டார்.

கிழக்குமாகாணத்தில் உள்ள பத்து பிரதேச சபைகளில் ஏழுபிரதேசசபைகளில் வெற்றியீட்டிய ஐக்கிய தேசியக் கட்சியினால் இதனை ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

மற்றும் கிழக்கு மாகாணத்தில் உள்ள ஐ. தே. க முஸ்லிம் அரசியல்வாதிகளுக்கும் அஷ்ரப்புக்கும் இடையே தனிப்பட்டமோதல்கள் உண்டு. அந்த அரசியல் வாதிகளிலும்பார்க்க அஷ்ரப் புத்திக் கூர்மை படைத்தவர் என்பது எனது கருத்து. இப்படி நான் சொன்னாலும் கட்சி தனது சொந்த ஆட்களுடன்தான் நிற்கவேண்டும். அவர்களை நாம் தூக்கி எறிந்து விடக் கூடாது.

அஷ்ரபுக்கு அதிர்ஷ்டம் உண்டாகட்டும் என்று நான் வாழ்த்துகின்றேன்.

இப்படி காமினி திஸநாயக்கா தெரிவித்தார். (இ-எ)

# இன்று முதல் வரி அட்டை விநியோகம்

இன்று தொடக்கம் மோட்டார் வாகனங்களுக்குரிய 94ஆம் ஆண்டு வரி அட்டை — 01-08-94 திகதி பத்திரிகைச் செய்தியில் குறிப்பிடப்பட்ட அலுவலகங்களில் —சம்பந்தப்பட்ட உதவி அரச அதிபர் பிரிவைச் சேர்ந்த மோட்டார் வாகன உரிமையாளர்களுக்கு வழங்கப்படும் என போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவின் மோட்டார் வாகனப் பதிவுப் பகுதியினர் அறிவித்துள்ளனர். (உ)

# கொழும்பு செல்லும் நோயாளர்கள் கவனத்திற்கு

கொழும்பில் சிகிச்சை பெற செல்ல தெரிவு செய்யப்பட்ட நோயாளர்களையும், அவர்களுடன் செல்பவர்களையும் நாளை வியாழன் காலை 9 மணிக்கு யாழ் ஆஸ்பத்திரிக்கு வருமாறு பணிப்பாளர் கேட்டுள்ளார்.

இரண்டு நாட்களுக்குத் தேவையான உணவு, குடிதண்ணீருடன் சமூகம் தருமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஒ-15-51)

யாழ் மாவட்டத்தில்

# முத்திரை, வான் கடித உறை தட்டுப்பாடு நிலவுகிறது

யாழ்ப்பாணம், ஆக. 3

ஒரு ரூபா பெறுமதியான முத்திரை மற்றும் வான் கடித உறை பேன்றவற்றிற்கு யாழ் மாவட்டத்தில் உள்ள தபாலகங்களில் பற்றாக்குறை நிலவுவதாக தெரிவிக்கப்படுகிறது.

தேவைப்படுவோருக்கு மட்டுமே இப்போது யாழ். பிரதம தபாலகத்தில் இவை கட்டுப்பாடான முறையில் விநியோகிக்கப்படுவதாகவும் அறிவிக்கப்படுகிறது.

அடுத்து பருத்தித்துறைக்கு வரும் 'ருகுணு' கப்பலில் முத்திரைகளும் வான் கடித உறைகளும் எடுத்து வரப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-4)

ஸ்தான சாதனா பாடசாலையை

# சங்கிலியன் வித்தியாலயம் என மாற்ற நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 3

"நல்லூர் ஸ்தான சாதனா த. க. பாடசாலையின் பெயரை சங்கிலியன் வித்தியாலயம் என மாற்ற பாடசாலையின் பழைய மாணவர் சங்கம் முயற்சிகள் எடுத்து வருகின்றது".

அண்மையில் நடைபெற்ற பாடசாலையின் வைரவிழா முன்னோட்ட அரங்கில் சங்கத் தலைவர் திரு. எஸ். புலேந்திரராசா இவ்வாறு தெரிவித்தார்.

அதிபர் திரு சி வைகுந்தசாமி அரங்கிற்குத் தலைமை வகித்தார். நல்லூர் கோட்டக் கல்வி அதிகாரி திருமதி சரோஜா பேரானந்தம், திரு எஸ். ஜீவானந்தம், திரு. நா. காசிவிஸ்வநாதன் ஆகியோரும் அரங்கில் உரை நிகழ்த்தினார்கள். (க-111)

# புதுடில்லி சார்க் மாநாடு ஒத்திவைக்கப்பட்டது

எட்டாவது சார்க் உச்சி மாநாடு இவ்வாண்டு நடைபெறாது அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை இந்தியாவின் தலைநகர் புதுடில்லியில் அது நடைபெறும் என்று அறிவிக்கப்படுகிறது.

பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் கடந்த வாரம் நடைபெற்ற சார்க் அமைப்பு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களின் கூட்டத்தில் இது தொடர்பான தீர்மானம் எடுக்கப்பட்டது.

எட்டாவது சார்க் உச்சி மாநாடு இவ்வாண்டு நவம்பரில் புதுடில்லியில் நடைபெறுவதாக இருந்தது. இந்த ஆண்டு இறுதியில் இந்தியாவின் வட. மாநிலங்களில் சட்டசபைத் தேர்தல்கள் நடைபெறவிருப்பதன் காரணமாக, இந்த ஆண்டின் சார்க் உச்சி மாநாட்டை பின்போடும்படி இந்திய அரசாங்கம் சார்க் அமைப்பின் நடப்பு வருட தலைவராக உள்ள பங்களாதேஷ் அரசாங்கத்தைக் கோரியிருந்தது. (உ-எ)

# கொள்ளையடித்த வழக்கில் எதிரிக்கு சிறை, அபராதம்

இரு வெவ்வேறு தினங்களில் பட்டப்பகல் வேளையில் வீதியில் சென்று கொண்டிருந்த பெண்களிடம் இருந்து தங்கச் சங்கிலிகளை அறுத்துச் சென்ற நபருக்கு சுன்னாகம் மாவட்ட நீதிமன்றத்தில் இரண்டு மாத சிறையும், ஆறாயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது.

உடுவில் கவ்லேனில் வைத்து தாவடி தெற்கைச் சேர்ந்த கேதீஸ்வரன் ஞானாம்பாள் என்பவரிடமிருந்தும் —

உடுவில் செப்சன் முகாம் ஒழுங்கையில் வைத்து உடுவில் லவ்லேனைச் சேர்ந்த சித்திரவதனி என் பவரிடமிருந்தும் —

தனித்தனியே பத்தாயிரம் ரூபா பெறுமதியான சங்கிலிகளை அறுத்து எடுத்ததாக குறிப்பிட்ட நபர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

இருமுறைப் பாட்டாளர் களினதும் புகார்களை தொடர்ந்து சுன்னாகம் காவல் துறையினர் தம்பையா உதயகுமார் என்பவரை சந்தேகத்தின் பேரில் கைது செய்து விசாரணை மேற்கொண்டதாகவும் குறிப்பிட்ட நபரிடம் இருந்து களவுபோனதாகக்கருதப்பட்ட சங்கிலிகள் மீட்கப்பட்டதாகவும் — நீதிமன்ற விசாரணைகளின் போது தெரிவிக்கப்பட்டது.

உரியவர்களிடம் இரு சங்கிலிகளும் ஒப்படைக்கப்பட்டது.

முதலாவது குற்றத்துக்காக இரண்டு மாதச் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் —

இரண்டாவது குற்றத்துக்காக ஆறாயிரம் ரூபா அபராதம் செலுத்த வேண்டும் என்றும் நீதிபாளர் திரு.செ.மயூரன் எதிரிக்கு உத்தரவிட்டார். (எ-152)

ப. நோ. கூ. சங்கக் கிளைகளில்

# பொருள் விநியோக முறை குறித்து மக்கள் அதிருப்தி

அச்சுவேலி, ஓக. 3

அச்சுவேலிப் பகுதியில் பலநோக்கு கூட்டுறவுச் சங்கக் கிளைகள் சிலவற்றின் பொருள் விநியோக நடைமுறை பொதுமக்களை சிற்றம் கொள்ளச் செய்துள்ளது.

பலநோக்கு கூட்டுறவுச்சங்க கிளை நிலையங்கள்மூலம் சில்லறை விற்பனை என்ற பெயரில் மூடை மூடையாக முக்கியமான உணவுப் பொருள்களும் பாவனைப் பொருள்களும் தனியார் வர்த்தகர்களுக்கும் வியாபார நிலையங்களுக்கும் கட்டுப்பாடு இல்லாத நிலையில் விநியோகம் செய்யப்படுகின்றது.

அதேசமயம் பாவனையாளருக்கு — குறிப்பாகசீனி பருப்பு போன்றவை பங்கீட்டு அடிப்படையில் அரை கிலோ, 2½ கிலோ என வழங்கப்படுகிறது.

இதுகுறித்துபாவனையாளர் அதிருப்தி தெரிவித்துள்ளனர். (ஒ-11)

# ஜெய்ப்பூர் வளர்ச்சிக்கு அனைவரும் உதவ வேண்டும்

## 7 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் உரை

யாழ்ப்பாணம், ஓக 3

"சமுதாயத்தில் உள்ள கால்களை இழந்த அங்கவீனர்களுக்கு சேவைபுரியும் ஜெய்ப்பூர் ஸ்தாபனத்தின் வளர்ச்சிக்கு அனைவரும் தங்களால் இயன்ற பங்களிப்பை வழங்க வேண்டும்."

யாழ். பரியோவான் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் கடந்த 22 ஆம் திகதி நடைபெற்ற [illegible] செயற்கைக்கால் [illegible] கொழும்பு நட்புறவுச் சங்கத்தின் யாழ். கிளையின் 7ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி இடம்பெற்ற விளையாட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் யாழ். வதிவிடப் பிரதிநிதி செல்வி பேரி பேர்க்கின்ஸ் இவ்வாறு கூறினார்.

யாழ் கிளையின் திட்டப் பணிப்பாளர் திருமதி [illegible] ஆவது.

அங்கவீனர்களும் எவருக்கும் சளைத்தவர்கள் அல்ல என்பதை இந்த விளையாட்டு நிகழ்வுகளின் மூலம் ஜெய்ப்பூர் பாவனையாளர்கள் நிரூபித்துள்ளார்கள்.

அன்றைய தினம் காலையில் வீதி நிகழ்வுகளாக சைக்கிள் ஓட்டம், மூன்று சில்லு சைக்கிள் ஓட்டம் ஆகியனவும் மாலையில் மைதான நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

இப் போட்டிகளில் பங்குபற்றிய ஜெய்ப்பூர் அவயவப் பாவனையாளர் அனைவருக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன. (அ-4)

ஒன்றே கால் தொன் நிறையுடைய

# கருங்கல் விநாயகர் சிலை பொலன்னறுவையில் மீட்பு!

கொழும்பு ஓக. 3

12 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த விநாயகர் சிலை ஒன்று பொலன்னறுவையில் கண்டெடுக்கப்பட்டிருக்கிறது.

கருங்கல்லினால் ஆன இந்தச் சிலையின் நிறை ஒன்றே கால் தொன் ஆகும்.

இந்தச் சிலை இரண்டு அடி உயரமும் ஒன்றரை அடி அகலமும் கொண்டதாகவும்.

ஒரு தொன்னுக்கும் கூடுதல் நிறையுள்ள விநாயகர் சிலை கண்டெடுக்கப்பட்டிருப்பது இதுவே முதல் தடவை என்று தெரிவிக்கப்பட்டது.

அகழ்வு வேலைகளுக்குப் பொறுப்பான அதிகாரியான ஜயசேகர குலசிங்க இது குறித்து தகவல் தருகையில் இந்தசிலை நிலத்துக்குக் கீழ 62 செண்டிமீற்றருக்கு அடியில் காணப்பட்டதாகத் தெரிவித்தார்.

12 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த உள்ளூர்ச் சிற்பிகளால் இந்தச் சிலை வடிக்கப்பட்டிருக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இச்சிலை தற்போது அலகேன பிரிவேனா அலுவலகத்தில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கிறது.


## நன்றி நவிலல்

31 - 07 - 94 பெருமாக்கடவை தொண்டர் சபையினரால் மிகவும் சிறப்புற நடத்தப்பட்ட மாட்டு வண்டிச் சவாரிக்கு சகல ஒத்துழைப்புக்களையும் வழங்கிய அனைவருக்கும் எமது உள்ளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பெருமாக்கடவை தொண்டர் சபை

(7287)



## Y. M. C. A.

### TALENT CONTEST '94' WESTERN AND EASTERN

Events:
Individual Vocal
Group vocal
Individual Instrumental
Duets On Piano.

For Age Groups

| | | | | |
|---|---|---|---|---|
| Under | | 9 | — | 1-1-86 |
| Juniors | U | 13 | — | 1-1-82 |
| Intermediates | U | 15 | — | 1-1-80 |
| Seniors | U | 19 | — | 1-1-76 |
| Open | | | | |

Entries Close On 15th August

For More Details and Entry Forms Contact
Programme Secretary

Y. M. C A
JAFFNA.

(8825)



## விசேட பொதுக் கூட்டம்

### தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

யாழ். மாவட்டம்

இடம்:- விஞ்ஞான கல்வி நிலையம் யாழ்ப்பாணம் (எழிலகம் முன்பாக)

காலம்:- இன்று (3 ஆம் தேதி) புதன் காலை 10 மணி

மிக முக்கியமான விடயங்கள் பற்றி கிறந்த கலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் தெளிவுபடுத்த உள்ளனர்.

தொடர்ச்சியாக 3 (மூன்று) கூட்டங்களுக்கு மேல் சமுகம் கொடுக்காதவர்களின் உறுப்புரிமை நீக்கப்படும் என்பதால் இக் கூட்டத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து தவறாது சமுகமளிக்கவும்.

குறிப்பு:-
பொது நிர்வாகசபை உறுப்பினர்கள் அன்று காலை 9 மணிக்கே சமுகம் தரவும்

பொதுச் செயலாளர்
யாழ். மாவட்டம்

[சி/8824]



## FIRST DEATH ANNIVERSARY IN LOVING MEMORY OF

BORN ON: 14 — 07 — 1915



DIED ON: 03 — 08 — 1993

Mrs. Daisy Pavalam Sukirtharatnam

Entered in to Glory on 03 08-1993

"For Those Who have Passed In to the marvellous Light of thy Presence we give These Thanks O Lord"

Fondly Remembered by
Your Loving Children,
In - Laws and Grand Children

S. C Vasanthakumar,
"Ratna Green"
Uduvil.

(7288)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# தேர்தல் கடமைக்கு பொலீஸார் நெடுந்தீவு செல்ல முடியாத நிலை

## முழுப் பொறுப்பும் ஈ.பி.டி.பியினரிடம் ஈ.பி.ஆர்.எல்.எவ். ஆதரவாளர் வெளியேற்றம்

கொழும்பு, ஓக. 3

தேர்தல் நடவடிக்கைகளுக்கு இசைவான ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தும் வகையில் யாழ்ப்பாணத் தீவுப் பகுதிகளில் பொலீஸாரைக் கடமையில் ஈடுபடுத்துவதற்கு இணக்கம் காணப்பட்ட போதிலும் நெடுந்தீவுக்கு இதுவரை பொலீஸார் அனுப்பி வைக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

நெடுந்தீவின் பாதுகாப்பு முற்றாக ஈ.பி.டி.பியினரின் கைகளில் தான் உள்ளது என்றும் அங்கு பொலீஸ், கடற்படை, இராணுவம் எதுவுமே இடையாது என்றும் ஈ.பி.ஆர்.எல்.எவ். வட்டாரங்களை மேற்கோள் காட்டி 'சண்டே லீடர்' தகவல் வெளியிட்டுள்ளது.

நெடுந்தீவில் 750 ஈ.பி.டி.பியினர் உள்ளனர். உணவு, டீசல் விநியோகம் மற்றும் படகுச் சேவைகளை ஈ.பி.டி.பியினரே நடத்தி வருகின்றனர்.

ஈ.பி.டி.பியினரின் அச்சுறுத்தல் காரணமாக ஈ.பி.ஆர்.எல்.எவ். வேட்பாளரான ஒய்வு பெற்ற அதிபர் சே. கனகரத்தினம் என்பவர் நெடுந்தீவை விட்டு வெளியேறிவிட்டார். இப்போது அவர் அனலைதீவில் கடற்படை முகாமுக்கு அருகில் வசித்து வருகிறார் என ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பு தெரிவித்துள்ளது.

நயினாதீவுக்கு வேறு எவரும் செல்ல முடியாது; ஈ.பி.டி.பியினர் மட்டுமே அங்கு உள்ளனர். அங்குள்ள மக்களின் எண்ணிக்கை பற்றி எவருக்குமே தெரியாது. இப்படியான நிலையில் தீவுப்பகுதிகளில் நீதியான, சுதந்திரமான தேர்தலை அரசு எவ்வாறு நடத்தப் போகிறது என்று ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கம் கேட்டுள்ளது.

எல்லாத் தீவுகளிலும் 12 மணித்தியால இரவு நேர ஊரடங்கு அமுலாகின்றது. ஊர்காவற்றுறையில் மட்டும் ஒரு வாகனம் உண்டு. ஏனைய தீவுகளில் சைக்கிள்களைத் தவிர வேறு வாகனமே இல்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், வாக்களிப்பின் போது ஆள்மாறாட்டத்தைத் தடுப்பதற்காக அவதானிகளை அரசு எவ்வாறு அனுப்பப் போகிறதோ தெரியவில்லை — என்றும் ஈ.பி.ஆர்.எல்.எவ். பேச்சாளர் தெரிவித்தார் என்றும் "சண்டே லீடர்" செய்தி வெளியிட்டுள்ளது. (இ-எ)

(மற்றொரு செய்தி 4 ஆம் பக்கத்தில்)

## தீவுப்பகுதி சென்ற 10 உறுப்பினர் பற்றி இதுவரை தகவல் இல்லை

### ஈ.பி.ஆர்.எல்.எவ். கவலை

யாழ்ப்பாணம் ஓக 3

தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காகத் தீவுப் பகுதிகளுக்கு ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ள தமது கட்சியைச் சேர்ந்த பத்து உறுப்பினர்கள் பற்றி இதுவரை தகவல் எதுவும் இல்லை என்று ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கம் கவலை தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் தேர்தலுக்கு இன்னும் இரண்டு வாரங்கள் மட்டுமே இருக்கின்ற சூழ்நிலையில் தேர்தலை ஒத்தி வைக்குமாறு கோராமல் எங்களால் வேறு என்ன செய்யமுடியும் என்று தேர்தல் ஆணையாளரிடம் ஈ.பி.ஆர்.எல்.எவ் கேள்வி எழுப்பி உள்ளதாக கொழும்பு பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

தேர்தல் தேவைகளுக்கான துண்டுப் பிரசுரங்கள், ஆவணங்கள் ஆகியவற்றை எடுத்துச் செல்வதற்கு வசதியாக திருகோணமலைக்கும் தீவுப் பகுதிக்கும் இடையிலான கப்பல் சேவையை அதிகரிப்பதற்கும் —

தீவுப் பகுதிகளில் தொலைபேசி, போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தவும் — இணக்கம் காணப்பட்டதென்றும் ஆனால் இதுவரை இது அமுல் செய்யப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ)

# வெளிநாட்டு அவதானிகள் தீவுப்பகுதி செல்ல முயற்சி

கொழும்பு, ஓக. 3

சர்வதேச மனித உரிமைகள் சட்ட அமைப்பில் இருந்து தெரிவு செய்யப்பட்ட வெளிநாட்டு அவதானிகள் குழு யாழ். மாவட்டம் — தீவுப்பகுதிகளுக்குச் சென்று வாக்களிப்பு தினத்தன்று நிலைமையை கண்காணிக்கும் சாத்தியம் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வாஷிங்டனைத் தலைமையகமாகக் கொண்டியங்கும் இந்த அமைப்பின் பிரதிநிதிகள் தற்போது கொழும்பு வந்துள்ளனர்.

தீவு பகுதிகளுக்குச் சென்று வாக்களிப்பை அவதானிப்பதற்குத் தேவையான வசதிகளை செய்து தரும்படி கோரி, இக்குழுவினர் தேர்தல் ஆணையாளருடன் பேச்சுக்களை நடத்தி வருவதாக இக்குழுவின் பெண் பேச்சாளர் ஒருவரை மேற்கோள் காட்டி 'சண்டே லீடர்' தகவல் வெளியிட்டிருக்கிறது.

"யாழ் செல்வதில் உறுதியாகவுள்ளோம். ஆனால் இலங்கை அரசின் உதவியின்றி நாங்கள் செல்ல முடியாது" — என்றும் அவர் கூறினார். (இ-எ)

## பதற்றம் நிறைந்த பகுதிகளின் வேட்பாளர்களுக்கு பொலீஸ் பாதுகாப்பு

கொழும்பு, ஓக. 3

வடக்கு-கிழக்கு மாகாணம் உட்பட நாட்டின் பதற்றம் நிலவும் பகுதிகளில் போட்டியிடும் வேட்பாளர்களின் பாதுகாப்புக்கு ஆயுதம் தரித்த ரிசர்வ் பொலீஸ் கான்ஸ்டபிள்கள் வழங்கப்படவுள்ளனர்.

அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் நடத்திய ஆலோசனையை அடுத்து தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டீ சில்வா முன்கண்ட முடிவை எடுத்திருக்கிறார்.

ஒவ்வொரு வேட்பாளருக்கும் இரண்டு ரிசர்வ் பொலீஸ் கான்ஸ்டபிள்கள் பாதுகாப்பு வழங்குவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

## பிரதமர் பதவி: சந்திரிகாவை அழைக்க டி. பி. தயங்கலாம்

கொழும்பு, ஓக. 3

பொதுத் தேர்தலின் பின்னர் புதிய பிரதமரை நியமனம் செய்யும்போது ஜனாதிபதி நாடாளுமன்றத்தில் உள்ள கட்சிகளின் தலைவர்களையே கருத்தில் கொள்வார்.

தமது செயலாளர் கே. எச். ஜே. விஜேதாஸா ஊடாக பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பொதுச்செயலாளர் டி. எம். ஜயரத்தினாவுக்கு அனுப்பிய பதிலில் ஜனாதிபதி விஜேதுங்க முன்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தேர்தலுக்கு முன்பு பிரதமர் நியமனம் பற்றி முடிவு செய்ய ஜனாதிபதி கட்டுப்பட்டவரல்லர் என்றும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வெற்றியீட்டினால் பிரதமராக சந்திரிகாவையே நியமிக்க வேண்டும் என்று முன்னணியின் சார்பில் அதன் பொதுச் செயலாளர் டி. எம். ஜயரத்தினா ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்த கடிதத்துக்கே இப்பதில் அனுப்பி வைக்கப்பட்டது.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையானோரின் நம்பிக்கையைப் பெற்றுக் கொண்ட ஒருவரையே அரசமைப்புக்கு இணங்க ஜனாதிபதி பிரதமராக நியமிப்பார்.

தேவை ஏற்படின் புதிய நாடாளுமன்றத்தில் இடம்பெறும் அரசியல் கட்சித் தலைவர்கள் பற்றியும் ஜனாதிபதி கவனத்துக்கு எடுத்துக் கொள்வார்" — என்று அப்பதில் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-எ)

## தேர்தல் கண்காணிப்பு: அவதானிகளை அனுப்ப ஆணையாளர் கோரிக்கை

கொழும்பு, ஓக. 3

பொதுத் தேர்தலைக் கண்காணிக்க அவதானிகளை அனுப்பும்படி தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டீ சில்வா, பொதுநலவாய அமைப்பின் செயலகம், சார்க் அமைப்பு, ஜப்பான், ஆசிய, அடிப்படை உரிமைகளுக்கான ஐ நா. அமைப்பு, சார்க் நாடுகள் அனைத்துக்கும் அழைப்பு அனுப்பியுள்ளார்.

30 முதல் 40 வரையான அவதானிகளைக் கொண்டதாக இக்கண்காணிப்புக் குழு இருக்கும். [இ-எ]

## மினிபஸ் சேவை சங்கம் புதிய பஸ் சேவை

தென்மராட்சி, ஓக. 3

தென்மராட்சி மினி பஸ் சேவைகள் சங்கம் இன்று சாவகச்சேரியிலிருந்து கன்னாதிட்டி வரையிலான புதிய மினிபஸ் சேவையை நடத்த முதலாம் திகதி தொடக்கம் ஆரம்பித்துள்ளனர்.

தினமும் காலை ஏழு மணிக்கு சாவகச்சேரியிலிருந்து புறப்பட்டு கன்னாதிட்டி செல்லும் மினிபஸ் காலை ஒன்பது மணிக்கு அங்கிருந்து புறப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-117)

## மத்தியஸ்தர் தெரிவு பயிற்சி வகுப்புகள்

யாழ்ப்பாணம், ஓக. 3

பருத்தித்துறை கரவெட்டி மத்தியஸ்தர் சபைகள் புதிய மத்தியஸ்தர்களை உருவாக்கும் திட்டத்தின் கீழ் வடமராட்சி வடக்கு மத்தியஸ்தர் சபையின் அனுமதியுடன் மத்தியஸ்தர் தெரிவு பயிற்சி வகுப்புகளை ஆரம்பிக்க உள்ளது.

ஆரம்ப வைபவம் 6 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு தேவரையாளி இந்துக் கல்லூரியில் மத்தியஸ்தர் சங்கத் தலைவர் திரு: மா. கிருஷ்ணானந்தன் தலைமையில் நடைபெறும். (அ)

## மீளாய்வு

வலிகாமம் தெற்கு ஓக. 3

பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுபவர்களுக்கான நிதி ஒதுக்கீடு, வடக்குக் கிழக்கு மாகாண சபையினால் நிறைக்கப்பட்டதைத் தொடர்ந்து, வலிகாமம் வடக்கு தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுவோர் பற்றிய விபரம் ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவு ரீதியாக மீளாய்வு செய்யப்பட்டு வருகிறது. (எ-152)

## விண்ணப்ப முடிவு திகதியை நீடித்தல்

யாழ்ப்பாணம், ஓக. 3

அரச கூட்டுத்தாபன, மாகாண சேவை கருக்கெழுத்தாளர் சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்ப முடிவு திகதியை நீடிக்க நடவடிக்கை எடுக்குமாறு வடமராட்சி கருக்கெழுத்துச் சங்கம் யாழ்ப்பாணம் அரச அதிபரைக் கேட்டுக் கொண்டுள்ளது.

மேற்படி பதவிக்கான விண்ணப்ப முடிவு திகதி ஜூலை 28 என பத்திரிகைச் செய்திகளின் படி அறிய வருகின்றது. இது சம்பந்தமான அரச வர்த்தமானி முடிவு திகதியின் பின் தான் யாழ்ப்பாணத்தில் கிடைக்கப்பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## பனை விதை நடுகை

ஜெயபுரத்தில் அமைந்துள்ள ஐந்து ஏக்கர் தசநிலக்காணியில் கற்பகச் சோலை திட்டத்தின் கீழ் பனை விதை நடுகை செய்வதற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கையாக பூநகரி தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கம், மன்னார் மாவட்ட தமிழ்ழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பனை தென்னைவள அபிவிருத்திப் பகுதியுடன் இணைந்து செயற்படுத்தி வருகின்றது.

இதன் முதற் கட்டமாக ஜெயபுர காணி தற்பொழுது திருத்தம் செய்யப்பட்டு வருகின்றது.

எதிர்வரும் ஐப்பசி மாதம் முப்பதாம் திகதி மேற்படி காணியில் பனை விதை நடுகை செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

## பௌதிகவியல் செயன்முறை பயிற்சி

யாழ்ப்பாணம், ஓக. 3

க. பொ. த. உயர்தர பௌதிகவியல் செயன்முறைப் பரீட்சை யாழ். பல்கலைக்கழக பௌதிகவியல் ஆய்வு கூடத்தில் காலை 8-30முதல் மாலை 4-30 மணி வரை நாளை 4ஆம் திகதி வலயம் 1 ஆசிரியர்களுக்கும் மறுதினம் 5ஆம் திகதி வலயம் 2 ஆசிரியர்களுக்கும் இடம்பெறும் பாடசாலைகளில் உயர்தர வகுப்புகளில் பௌதிகவியல் கற்பிக்கும் அனைத்து ஆசிரியர்களும் பங்குபற்றுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (அ)

## போலிப் பத்திரிகைபிரதிகள்; அச்சக முகாமையாளர் கைது

கொழும்பு, ஓக. 3

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பிரதமர் வேட்பாளர் சந்திரிகா பற்றி அவதூறான தகவல்கள் கொண்ட போலி அந்த பத்திரிகைப் பிரதிகள் கைப்பற்றப்பட்ட சம்பவம் ஒன்று தொடர்பாக கொழும்பு நகரில் உள்ள அச்சக முகாமையாளர் ஒருவரை பொலீஸார் கைது செய்தனர்.

அச்சகமும் சீல் வைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

## ஹோட்டலில் தங்கியிருந்த வர்த்தகர் விசாரணை

கொழும்பு, ஓக. 3

சந்திரிகா குமாரணதுங்காவைக் கொலைச் சதி செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்த இலங்கை வர்த்தகர் ஒருவரை இரகசியப் பொலீஸார் கடந்த வாரம் விசாரித்தனர்.

விசாரணையின் பின்னர் அவர் விடுதலை செய்யப்பட்டார்.

இதே வேளை — இவ்வர்த்தகருடன் தொடர்புடைய அவரின் ஐந்து கூட்டாளிகளை கண்டு பிடிக்கும் நடவடிக்கையில் பொலீஸார் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கொலைச் சதியை நிறைவேற்ற இந்த ஐந்து பேரும் "வாடகைக்கு" அமர்த்தப்பட்டிருக்கலாம் என்று பொலீஸார் நம்புகின்றனர்.

இது வரை 15 பேர் இச்சம்பவம் தொடர்பாக விசாரிக்கப்பட்டனர். விசாரணையின் பெறுபேறுகளை பொலீஸார் இவ்வாரத்தில் சந்திரிகாவை நேரில் சந்தித்து விளக்குவர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (இ-எ)

## உணவு அட்டை மீளாய்வு

நல்லூர் பிரதேச செயலக பிரிவிலுள்ள அனைத்துக்குடும்பங்களினதும் 'அ' 'உ' உணர் உணவு அட்டைகள் கிராம சேவை அலுவலர்களால் மீளாய்வு செய்யப்பட்டிருக்கின்றன. இதன் போது அனைத்துக் குடும்பங்களின தும் விவரங்கள் படிவ மூலம் சேகரிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு மீளாய்வு செய்யப்பட்ட அட்டைகளுக்கே எதிர்வரும் மண்ணெண்ணெய் வழங்கப்படவுள்ளதால், நல்லூர் பிரதேச செயலக பிரிவிலுள்ள மக்களை கிராம சேவை அலுவலர்களுக்கு பூரண ஒத்துழைப்பை வழங்கி அட்டைகளை மீளாய்வுக்குட்படுத்துமாறு நல்லூர் பிரதேச செயலர் கேட்டுக்கொள்கிறார். (அ)

## தையல் பயிற்சி

தென்மராட்சி, ஓக. 3

இலங்கை செஞ்சிலுவைச் சங்க ஊர்காவற்றுறை பிரிவினரால் இலவச தையல் பயிற்சி வகுப்பு சங்கத் தலைவர் ம. அழகேந்திரனால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இப் பயிற்சி வகுப்பில் முப்பது யுவதிகள் கலந்து கொள்கின்றனர். (இ-117)

## தேர்தல் முறைமை பற்றிய உரை

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் சமூக விஞ்ஞானப் பிரிவின் அனுசரணையுடன் இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ் பல்கலைக்கழக புவியியற்றுறை மண்டபத்தில் "தமிழ்த் தேசியமும் இலங்கையில் தேர்தல் முறைமையும்" எனும் பொருளில் பொருளியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எஸ். கே. எஸ். நாதன் உரையாற்றுவார். பேராசிரியர் நா. பாலகிருஷ்ணன் தலைமை வகிப்பார். (அ)

## இலக்கிய போட்டி

சாவகச்சேரி அறநெறி இலக்கியப் பேரவை அதன் 5 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு சிறுகதை கவிதை உட்பட்ட இலக்கியப் போட்டி ஒன்றை நடத்தவுள்ளது. கடந்த மாதம் 24 ஆம் திகதி பேரவையின் தலைவர் திரு. என். துரைசிங்கம் தலைமையில் நடைபெற்ற மாதாந்தக் கூட்டத்தில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது. (க)

## எதிரணி வென்றால் அஷ்ரப்புக்கு அமைச்சர் பதவி கிடைக்குமா?

கொழும்பு, ஓக. 3

பொதுத் தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வெற்றியீட்டிய பின்னர் அமையும் அரசில் எனக்கு அமைச்சர் பதவி கிடைக்குமா என்பதை சந்திரிகா தீர்மானிப்பார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம். எச். எம். அஷ்ரப் முன்கண்டவாறு தெரிவித்தார்.

மறைந்த ஜனாதிபதி பிரேமதாஸா இரண்டு சந்தர்ப்பங்களில் எனக்கு அமைச்சர் பதவி அளிக்க முன்வந்தார். அதனை நான் ஏற்கவில்லை.

ஜனாதிபதி விஜேதுங்காவும் எனக்கு அமைச்சர் பதவி அளிக்க முன்வந்தார். அதனையும் நான் ஏற்க மறுத்துவிட்டேன்' — என்றும் அவர் தெரிவித்தார். (இ-எ)

## ரயில் கொள்ளையருக்கு சீனாவில் மரணதண்டனை

பீகிங், ஓக. 3

ரயில்களில் கொள்ளை நடத்திய 21 பேர் கொண்ட கும்பலைச் சேர்ந்த 12 பேருக்கு விதிக்கப்பட்ட மரணதண்டனையை சீன அரசு கடந்த வாரம் நிறைவேற்றியது.

எஞ்சிய 9 பேரின் மீதான மரண தண்டனை விரைவில் நிறைவேற்றப்படும் என்று பீகிங்கில் அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

ஐந்து லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களைக் கொள்ளையடித்ததாக 21 பேர் மீதும் குற்றஞ்சாட்டப் பட்டிருந்தது.

ரயில் கொள்ளையருக்கு சீனாவில் முதல்தடவையாக இப்போது தான் மரணதண்டனை விதிக்கப்படுகிறது. (எ-4)

# பொதுத்தேர்தல் முடிவடைந்தவுடன் வடக்கு- கிழக்கு மாகாணசபைத் தேர்தல்

### ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 3

பொதுத் தேர்தல் முடிவடைந்ததும் வடக்கு-கிழக்கு மாகாணசபைத் தேர்தலை நடத்தத் தாம் உத்தரவிடப் போவதாக ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா அறிவித்திருக்கிறார்.

வடக்கு-கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் விடுதலைப் புலிகள் போட்டியிட்டு, வெற்றியீட்டினால் சபையை அவர்கள் நடத்த முடியும் என்றும் அவர் கூறினார்.

மஹியங்கனையில் நடந்த பிரசாரக் கூட்டத்தில் பேசிய போது அவர் முன்கண்டவாறு தெரிவித்தார்.

"பொதுத் தேர்தல் முடிந்து புதிய அரசாங்கம் அமைந்ததும் எதுவித தாமதமின்றி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்து வடபகுதியை நான் விடுவிப்பேன்" — என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இனரீதியில் நாடு பிரிக்கப்படடால மாகாணங்கள் மற்றும் கொழும்பு உட்பட பல நகரங்கள் இனரீதியில் பிரிக்கப்பட வேண்டி ஏற்படும். இப்படிப் பிரிப்பது எங்கு போய் முடியும்? — என்றும் அவர் கேட்டார். (இ-எ)

## சந்திரிகாவை கொலை செய்யச் சதி: ஆதாரம் எதுவும் கிடைக்கவில்லை என்கிறது ஜனாதிபதி செயலகம்

கொழும்பு, ஓக. 3

சந்திரிகா குமாரணதுங்காவை கொல்ல இடம்பெற்றதாகக் கூறப்படும் சதி பற்றி நடத்தப்பட்ட விசாரணைகளில், சதி இடம்பெற்றதற்கான சாட்சியங்கள் வெளிவரவில்லை என்று ஜனாதிபதியின் செயலகம் அறிவித்துள்ளது.

இதுபற்றி இரகசியப் பொலீஸ் திணைக்களத்தின் பிரதிப் பொலீஸ்மா அதிபரிடம் இருந்து பெறப்பட்ட அறிக்கையின் அடிப்படையில் ஜனாதிபதி செயலகம் முன்கண்டவாறு கருத்துவெளியிட்டுள்ளது.

"கொலைச் சதி தொடர்பாக சந்திரிகாவிடமிருந்து வாக்குமூலம் பெற முயற்சி செய்யப்பட்டது. தீவிர பிரசார [illegible] அவரிடமிருந்து பொலீஸாரால் வாக்கு மூலம் பெற முடியவில்லை.

எனினும் சந்திரிகாவின் தனிப்பட்ட பாதுகாப்பு அதிகாரியான உதவிப்பொலீஸ் அதிபர் சிறிகுமார கருணாரத்தினாவை விசாரித்த போது சதி பற்றிய தகவல் கொடுத்தவர் யார் என்பது தமக்குத் தெரியவில்லை என்று அவர்கூறியிருக்கிறார்.

ஆகவே தகவல் கொடுத்தவரின் அடையாளம் இரகசியப்பொலீஸாருக்குத் தெரியாதுள்ளது. ஆகவே நடத்தப்பட்ட விசாரணைகளில் இருந்து சதிபற்றி நிரூபணமாகவில்லை சந்திரிகாவிடமிருந்து வாக்கு மூலம் பெற இன்னும் முயற்சிக்கப்படுகிறது" — இவ்வாறு பிரதி பொலீஸ்மா அதிபர் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

ஆகவே தம்மைக் கொலை செய்யப்படுவதாக சந்திரிகா கூறியிருப்பது ஆதாரமற்றதாகும் என்று ஜனாதிபதியின் செயலகம்தமது அறிக்கையில் தெரிவித்துள்ளது. (இ-எ)

## ஒத்திவைப்பு

பேராதனை, ஓக. 3

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கல்வியைத் தொடர்ந்த யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கலைப்பிரிவு மாணவர்களின் பொதுக் கலை முதலாம் பிரிவு மீள் பரீட்சைகள் பல்கலைக் கழகத்தில் ஏற்பட்டுள்ள வேலை நிறுத்தம் காரணமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளன. (அ)

## லயன்ஸ் இலவச மூக்குக் கண்ணாடி

தென்மராட்சி, ஓக. 3

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினால் நடத்தப்பட்ட கண் பரிசோதனையின்போது தெரிவு செய்யப்பட்ட முப்பது பேருக்கு கடந்த முதலாம் திகதி இலவச மூக்குக் கண்ணாடிகள் லயன்ஸ் கழகத் தலைவர் லயன் த. நவரத்தினராசாவினால் வழங்கப்பட்டன. (இ-117)

**தமிழ் மண்ணைக் காக்க விரைந்திடுவோம்**
**மரங்கள் காக்க எழுந்திடுவோம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### காணி விற்பனைக்கு

கண்டிக்குளியில் தனியார் பாடசாலைகளுக்கு அண்மையில் 1½ பரப்பு காணி கிணற்றுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: Mrs. M Rasiah 22. st. Anne's Church Road, Chundikuli (சி-8819)

### முட்டைக்கோழி விற்பனை

கைகலன் பிறவுன் முட்டை இடும் கோழிகள் உடன் விற்பனைக்குண்டு. மல்லிகாபதி, சந்தை கிழக்கு ஒழுங்கை மாவிட்டபுரம். (32211)

### சேவல் குஞ்சு விற்பனை

பிறவுன் சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு மல்லிகாபதி சந்தை கிழக்கு ஒழுங்கை, மாவிட்டபுரம். (32212)

### ஆனந்தம் சீயாக்காய்

பேன், சொடுகு வராது பேண வேண்டிய மூலிகையுடன் சீயாக்காய் சேர்த்து சித்த மருத்துவ முறைப்படி தயாரிக்கப்பெற்றது ஆனந்தம் சீயாக்காய் பவுடர். கேட்டு வாங்கி பயன் பெறவும். (சி-8647)

### மணமகள் தேவை

B. Sc. Second Class Honours (யாழ். பல்கலைக்கழகம்) பட்டதாரி மகனுக்கு பெற்றோர் மணமகள் தேடுகின்றனர். வயது 31, Fair 5' 7'' தற்பொழுது ஆஸ்திரேலியாவில் உயர்கல்வி பயில்வதுடன் பகுதிநேர உத்தியோகமும் பார்க்கின்றார். விவாகம் இலங்கையில் செய்யலாம் A/L பட்டதாரிகள் விரும்பத்தக்கது. குறிப்புடன் விண்ணப்பிக்கவும். இல. 675, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (சி-8818)

### மணமகன் தேவை

லக்கினத்தில் செவ்வாய், நட்சத்திரம் சதயம் 2ஆம் பாதம், 1970இல் பிறந்த, அழகிய, A/L படித்த, நற்பண்புள்ள விகிதராகக் கடமையாற்றும் மணப்பெண்ணுக்கு தகுந்த வரன் தேவை. வெளிநாட்டில் உள்ளவர்களும் சாதகக் குறிப்புடன் தொடர்பு கொள்ளவும்: இல. 674, மே/பா உதயன், யாழ்ப்பாணம். [32192]

### தவறிவிட்டது

715990105V இலக்க அடையாள அட்டை, பல்கலைக்கழக அடையாள அட்டை மற்றும் முக்கிய பொருள்களுடன் கறுப்பு பேர்ஸ் 30-7-94 இல் இளாலிக்கரையில் தவறவிடப்பட்டுவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து செல்வி செ. அருள்மொழி இல. 48, சீனியர்லேன், யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். [32203]

### புலமைப் பரிசில் - 94

Bond கல்வி நிறுவனத்தால் 31-7-94, 02-8-94, 04-8-94, திகதிகளில் வெளியிடப்படும் ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான மாதிரிப் பயிற்சி வினாத்தாள்கள் (கணிதம்-தமிழ்) விடைகளுடன் 10/- மட்டும் எல்லா பிரபல புத்தகசாலைகளிலும் கிடைக்கும். (7559)

### மணிக்கூடு திருத்துதல்

சகல மணிக்கூடுகளும் உத்தரவாதத்துடன் குறைந்த செலவில் திருத்திக் கொடுக்கப்படும். உதிரிப்பாகங்களுக்காக மணிக்கூடுகள் வாங்கப்படும். சஜன்ஸ் வாச்வேக்ஸ், 12, புனையிரத நிலைய வீதி, சுன்னாகம் சந்திக்கருகில். (7558)

### ஆண்டு 4 வகுப்புகள்

ஆண்டு 4இற்கான சனி, ஞாயிறு வகுப்புகள் (week and Classes) 06-08-94 சனி முற்பகல் 8.00 மணிக்கு ஆரம்பமாகின்றன. ஒவ்வொரு சனி, ஞாயிறும் 8-00 – 11-00 வகுப்புகள் நடைபெறும். தொடர்பு கொள்ளவும். புதிய கல்வி நிலையம், இல 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (32128)

---

## 3 ஆம் மாத கண்ணீர் அஞ்சலி

### அமரர் விஸ்வலிங்கம் நாகலிங்கம்

(முன்னைநாள் நீர்ப்பாசன இலாகா உத்தியோகஸ்தர்)

05-05-1994 அன்று காலஞ்சென்ற விஸ்வலிங்கம் நாகலிங்கம் அவர்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்:

அம்மா: தங்கம்மா - நாகலிங்கம்.
சகோதரி: செவ்வந்தி - சுப்பிரமணியம்.
மருமக்கள்: சுரேஷ் (சுவிஸ்), பிருதிவிராஜ் (கனடா), மோகன் இந்திரஜித், யசோதரா,
பெறாமகன்: சபேசன்.

56, செட்டித் தெரு ஒழுங்கை, நல்லூர். [7568]

---

## பணி நிலை வெற்றிடம்

பின்வரும் பணிநிலைக்கான விண்ணப்பங்கள் தகுதி வாய்ந்தவர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

1. மொழிபெயர்ப்பாளர்
2. அச்செழுத்தாளர் (தமிழ்) - ஆண்கள்

விண்ணப்பம் செய்ய விரும்புவோர் தமது சுயவிவரங்கள் அடங்கிய விண்ணப்பங்களை 15-08-94ஆம் திகதிக்கு முன்னர் கீழ்க்குறிப்பிடப்படும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

விளம்பர இல. 676
உதயன் பத்திரிகை நிறுவனம்.
இல. 292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/8823)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக் கிரியையும்



| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 10 | 04 |
| 01 | 07 |
| 1934 | 1994 |

அமரர்
### வைத்திலிங்கம் இராஜரட்னம்
(நூலகர், பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை)

எம்மை மீளாத்துயரில் ஆழ்த்திவிட்டு 04-07-94 அன்று இறைவனடி சேர்ந்த எமது அன்புத் தெய்வத்தின் இறுதிச் சடங்கில் பங்கு கொண்ட அனைவருக்கும் எமது நன்றிகள்.

இன்று (03-08-94) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்தியத்திலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள், சகோதரர்,
உறவினர்கள்

10/1, சிவன்கோயில் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம். (32198)

---

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| பிறப்பு: | இறப்பு: |
|---|---|
| 24 | 06 |
| 05 | 08 |
| 1921 | 1991 |

### கந்தப்பு இரத்தினசாமி
(இளைப்பாறிய கமத்தொழில் பெரும்பாக உத்தியோகத்தர் Rtd D. O. A. S.)

திதி 03 – 08 – 1994

எங்கள் அன்புத் தெய்வமே!
பண்பான கணவனாய், பாசமுள்ள தந்தையாய்,
நேசமுள்ள மாமனாய், ஆசையுள்ள பேரனாய்,
வாழ்ந்து வழிகாட்டிச் சென்றீர்கள்!
ஆண்டுகள் மூன்று சென்றிடினும் ஆறாது எம் கண்ணீர்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

''பரமேஸ்வரி பவனம்''
சித்தப்பாதி
கரணவாய். (32127)

---

அனலைதீவுக்கு தேர்தல் பிரசாரத்துக்குச் சென்ற

# ஈ.பி.ஆர்.எல்.எவ். உறுப்பினர் ஈ.பி.டி.பிக்குத் தாவல்!

கொழும்பு, ஓக. 3

தேர்தல் பிரசாரம் செய்வதற்காக கொழும்பில் இருந்து அனலைதீவு சென்ற ஒன்பது ஈ.பி.ஆர்.எல்.எவ். உறுப்பினர்களில் ஒருவரான வரதராஜா என்பவர், அங்கு வைத்து ஈ.பி.டி.பி. இயக்கத்தில் சேர்ந்து கொண்டார் என்று ''சண்டே ஐலண்ட்'' தாவல் வெளியிட்டுள்ளது.

ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர்கள் சிலர் அனலைதீவு கடற்படை முகாமுக்குத் திரும்பியபோது, வாக்காளர்கள் ஊர்வலமாக முகாமுக்கு சென்றனர் என்றும்—

''தேர்தல் அலுவல்களுக்காக நாம் வரவில்லை. விரைவில் இந்த இடத்தைவிட்டுப் போய்விடுவோம்''— என்று ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர்கள் வாக்காளர்களிடம் கூறியதாகவும் செய்தி வெளியாகியது.

இதேவேளை— சாக்கின் களில் அங்கு வந்த ஐந்து ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கத்தினர் தாக்கப்பட்டனர் என்றும் அதன் பின்னர் அவர்கள் கடற்படை முகாமுக்குத் திரும்பிவிட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. [இ-எ]

## பயிலுநர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம்

வடமராட்சி ஓக. 3

பருத்தித்துறை கல்விக் கோட்டத்தில் கடமையாற்றி வரும் 70 பயிலுநர் ஆசிரியர்களுக்கு நிரந்தர ஆசிரிய நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் பருத்தித்துறைக் கல்விக் கோட்டத்துக்கு வந்து சேர்ந்துள்ளன.

1990ஆம் ஆண்டு பயிலுநர் ஆசிரியர்களாக நியமனம் பெற்றோர்களுக்கே இந்த நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (உ-173)

## நீர் வழங்கல் சபையால் குடிதண்ணீர் விநியோகம்

யாழ்ப்பாணம், ஓக. 3

வடபகுதி மீது அரசு விதித்துள்ள மின் விநியோக தடை காரணமாக தடைப்பட்டிருந்த தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபையின் குடிதண்ணீர் விநியோகத் திட்டம், சபையின் வடபிராந்திய அலுவலகம் எடுத்துக்கொண்ட முயற்சியை அடுத்து கடந்த ஆறு மாதங்களாக செயற்பட்டு வருகின்றது.

கரவெட்டி, கண்பொல்லை, அராலி வடக்கு, வட்டுக்கோட்டை, வாதரவத்தை, சுன்னாகம் போன்ற இடங்களில் உள்ள தண்ணீர் தாங்கிகளினூடாக இவ் விநியோகம் நீர் இறைக்கும் இயந்திரங்கள் மூலம் மேற்கொள்ளப்படுகிறது. இதற்கான மண்ணெண்ணெயை அரசாங்க அதிபர் கட்டுப்பாட்டு விலையில் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் வடபிராந்திய அலுவலகத்துக்கு வழங்கி வருகின்றார்.

குடிதண்ணீர் விநியோகத்திற்காககுடும்பம் ஒன்றிற்கு மாதாந்தம் 10 ரூபா மண்ணெண்ணெய்க் கட்டணமாக அறவிடப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-4)

## மேசைப்பந்து பயிற்சிப் பாசறை

யாழ்ப்பாணம், ஓக. 3

15 வயதிற்குட்பட்ட ஆண்கள் பெண்களுக்கான மேசைப் பந்துப்பயிற்சிப் பாசறை ஒன்றை யாழ். வை.எம்.சி.ஏ இம்மாதம் 18, 19, 20 ஆம் திகதிகளில் நடத்தவுள்ளது.

இப் பாசறை யாழ் வை.எம்.சி.ஏ.மண்டபத்தில் நடைபெறும். இப்பாசறையில் யாழ் நகரின் முன்னோடி வீரர்கள் பயிற்சி அளிப்பார்கள். (இ)

---

## சித்திர வகுப்புகள்

மாணவர்களுக்கான சித்திர வகுப்புக்கள்

ஆரம்பம்: **06 - 08 - 1994**

விவரங்களுக்கு:

**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**
14 ST, PETER'S LANE,
JAFFNA. (சி-8822)

---

''கலையகம்''
### ஓவியக் கல்வி நிலையம்
அனுசரணையுடன்

நகுவின்....

## ஓவியக் காட்சி-1994

இடம்: திரு இருதயக் கல்லூரி கரவெட்டி
காலம்: 06 – 08 – 1994 சனி
07 – 08 – 1994 ஞாயிறு
நேர: காலை 9முதல் மாலை 4வரை

மேற்படி காட்சியை
திரு. சிவசுப்பிரமணியம் (ஓவியர் ரமணி)
அவர்கள் ஆரம்பித்து வைப்பார்கள்.

★ ஆர்வலர்களை அழைக்கிறோம் ★
● பிரவேசம் இலவசம்.

— காட்சி அமைப்பாளர்கள்.

காட்சி சிறப்புற வாழ்த்துகிறோம்!
**கலை வாணி வீடியோ**
நெல்லியடி. [32195]

---

## கண்ணீர் அஞ்சலி

உடுவில் மகளிர் கல்லூரியில் கல்விபயிலுகின்ற செல்விகள் தே. வானதி (உயிரியற்பிரிவு, 94), தே. வாசுகி (உயிரியற் பிரிவு, 96) ஆகியோரின் தந்தையாராகிய

### திரு. தேவாமிர்தசுந்தரம்
அவர்களின்

பிரிவுச் செய்தியறிந்து நாம் ஆறாத்துயரடைவதுடன் அவர்களின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவிக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
பழைய மாணவிகளும் மாணவிகள்.

உடுவில் மகளிர் கல்லூரி
சுன்னாகம். [32214]

---

## சித்திரத்தேர்

அச்சுவேலி, ஓக. 3

ஆவரங்கால் ஸ்ரீ நடராச இராமலிங்கேஸ்வரர் ஆலயத்திற்கு புதிய சித்திரத்தேர் அமைக்கப்பட்டு வருகின்றது. புதிய சித்திரத்தேருக்கான 'அச்சு ஏற்றம்' நிகழ்வுகள் ஆலயத்தின் திருத்த திருவிழாவை அடுத்து நடைபெற்றன. (எ-17)

## நீர்ப் பிரச்சினை நீங்கியது

குருநகர் ஓக. 3

ஐந்நூறுக்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கும் யா/புனித றோக்ஸ் வித்தியாலயத்தில் கடந்த பலவருடங்களாக இருந்துவந்த குடிநீர் பிரச்சினை நீங்கியுள்ளது.

அதிபரும், ஆசிரியர்களும் எடுத்த அயராத முயற்சியின் காரணமாக யா/திருகுடும்ப கன்னியர் சபையூடாகப் பெற்றுக்கொண்ட நன்கொடை மூலம் ரூபா 15 ஆயிரம் செலவில் குழாய்க் கிணறு வித்தியாலயத்தில் அமைக்கப்பட்டுள்ளது. (உ-51)

இலங்கை வானொலியில்

## நந்தா மாலினி பாடல்களை ஒலிபரப்ப அரசு தடை

பிரபல சிங்களப் பாடகி நந்தா மாலினி பாடி புதிதாக வெளியான 'மதுபன' இசை நாடாவில் உள்ள மூன்று பாடல்கள் வானொலியில் ஒலிபரப்பப்படக் கூடாது என்று அரசு தடை விதித்துள்ளது.

இந்த இசை நாடா பற்றி வானொலியில் விளம்பரம் செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆனால் அதில் இடம்பெற்றுள்ள மூன்று பாடல்களை வானொலியில் ஒலிபரப்ப முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று ஒலிபரப்புக் கூட்டுத்தாபன வர்த்தக முகாமையாளர் எம். குணரத்ன தெரிவித்தார்.

தேர்தல் காலத்தில் அப்பாடல்களை ஒலிபரப்ப முடியாது என்றும் அவர் கூறினார்.

தமது பாடல்கள் ஒலிபரப்பப்படுவதை அரசு தடை செய்தது குறித்து தாம் ஆச்சரியப்படுவதாக நந்தாமாலினி தெரிவித்தார். (எ)

## அடையாள அட்டைக்கு காத்திருந்தார் ஒரு வருடம்!

### விண்ணப்பமோ கிராம சேவையாளரிடம்

யாழ்ப்பாணம், ஓக. 3

தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்து கடந்த ஒரு வருடகாலம் காத்திருந்த ஒருவர், பொறுமை இழந்த நிலையில் யாழ். செயலக ஆட்பதிவுத் திணைக்களத்துக்குச் சென்றார்.

அங்கு அலுவலக உத்தியோகத்தர் ஒருவரிடம் தமது அடையாள அட்டை குறித்து விசாரித்தார்.

செயலக உத்தியோகத்தர் சம்பந்தப்பட்ட தஸ்தாவேஜுகளை பார்வையிட்டு, ''கொழும்பில் இருந்து உமது அடையாள அட்டை வரவில்லை'' என்று கூறிவிட்டார்.

விண்ணப்பதாரி என்ன நடந்தது என்று அறிய விரைந்தார் யாழ். பிரதேச செயலகத்துக்கு. அங்கு சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களிடம் அடையாள அட்டை விண்ணப்பம் குறித்து கேட்டார்.

அங்கே அவருக்கு அதிர்ச்சி காத்திருந்தது. ''உமது அடையாள அட்டைக்குரிய விண்ணப்பப்படிவத்தை கடந்த மாதம்தான் கிராம சேவையாளர் எமக்கு அனுப்பினார். விரைவில் கொழும்பில் இருந்து அடையாள அட்டை வந்துவிடும்'' என்று பதில் வந்தது.

விண்ணப்பதாரி விறைத்துப் போனார். ''கடந்த வருடம் (1993) ஜூலை மாதம் கிராம சேவையாளரிடம் அடையாள அட்டைக்குரிய விண்ணப்பத்தை ஒப்படைத்திருந்தேன்!'' என்று கவலையுடன் தெரிவித்தார்.

அதற்கு பிரதேச செயலர் அலுவலக அதிகாரி, ''என்ன செய்வது? உமது பிரிவு கிராமசேவையாளரின் அசமந்தப் போக்கே காரணம்'' என்றார்.

யாழ். பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கிராம சேவையாளர் பிரிவு ஒன்றிலேயே இந்த அக்கறையீனமான செயல் இடம்பெற்றுள்ளது. (ஒ-17)

யாழ். மாநகர

## கரையோரப் பகுதிகளுக்கு நன்னீர் வழங்கும் யோசனை

### பொறியியலாளர் தெரிவிக்கிறார்

யாழ்ப்பாணம், ஓக. 3

யாழ். மாநகரில் கரையோரப் பகுதியில் வாழும் மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மாநகரப் பொறியியலாளர் புதிய யோசனை ஒன்றை வெளியிட்டிருக்கிறார்.

கரையோரப் பகுதியில் ஆதாரவாக விடப்பட்டுள்ள சில நன்னீர்க் கிணறுகளை பயன்படுத்துவதற்குப் பொதுமக்கள் அனுமதி தரும்பட்சத்தில், அக்கிணறுகளில் இருந்து கரையோரப் பகுதிகளுக்குக் குழாய் மூலம் நன்னீர் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொறியியலாளர் திரு. பி. தவராஜா தெரிவித்திருக்கிறார். (எ-17)

## இவ்வருடம் ஒரு தடவையே திரிபோஷா வந்துள்ளது!

### அதுவும் குறைந்த அளவில்!!

யாழ்ப்பாணம், ஓக. 3

நீண்ட காலத்திற்கு பின் வடபிராந்திய சுகாதாரத் திணைக்களத்திற்கு இரண்டாயிரம் பொதி திரிபோஷா மா ஒதுக்கப்பட்டபோதிலும் ஆயிரத்து 500 பொதிகளே கொழும்பிலிருந்து வந்து சேர்ந்துள்ளன.

இது குறித்து வடபிராந்திய பதில் பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மேற்படி மாவை அனுப்பி வைக்கும் நிறுவனத்திற்கு தெரியப்படுத்தியுள்ளார்.

ஒரு மாதத்திற்கு இரண்டாயிரம் பொதி திரிபோஷா மா வடபிராந்தியத்திற்கு தேவைப்படுவதாகவும் ஆனால் ஒவ்வொரு மாதமும் திரிபோஷா கிரமமாக கிடைப்பதில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வருடத்தில் கடந்த மாதத்திற்கான திரிபோஷா மாவே கிடைக்கப்பெற்றுள்ளது. இந்த மா தற்போது அரசினர் வைத்தியசாலைகளின் சிகிச்சை நிலையங்களில் தாய்மாருக்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்

## இழக்க முடியாத சொத்து இனவாதம்

இம்மாதம் 16ஆம் திகதி நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலை முன்னிட்டு இப்போது அரச வானொலியிலும், தொலைக்காட்சியிலும் அரசியல்வாதிகள் நாளாந்தம் பிரசாரம் செய்து வருகிறார்கள்.

தேர்தல் பிரசாரத்தின் போது கட்சிகள் அல்லது வேட்பாளர்கள் தமது கொள்கைகளையும், வேலைத்திட்டங்களையும் மக்களுக்கு தெரிவிக்கலாமே அன்றி — எதிரணியினரின் கொள்கைகளையோ, வேட்பாளர்களைத் தனிப்பட்ட முறையில் பாதிக்கும் விதத்திலோ சாடும் வகையில் கருத்துக் கூற முடியாது, கண்டிக்கக் கூடாது — என்பது தேர்தல் விதி.

அரசியல் தலைவர்களோ அல்லது வேட்பாளர்களோ அரசாங்க சாதனத்தைப் பயன்படுத்தி தமக்கு எதிரானவர்களின் கொள்கைகளைக் கண்டிக்கவோ அல்லது சுவிப்பட்ட ரீதியில் தூற்றி சேறு அள்ளி வீசவோ அனுமதிக்காதிருப்பது வரவேற்கத் தக்கதாகும்.

அரசியல் எதிரணிகளிடையே பகைமையையும் பூசலையும் வளர்க்காமல் பார்த்துக் கொள்வதில், அது விடயத்தில் கண்டிப்பாக இருக்கும் தேர்தல் விதி — தேர்தல் பிரசாரத்தில் இனவாதம் கக்குவதற்கு கட்டுப்பாடு விதிக்காமல், கண்டிப்பாக இல்லாமல் இருப்பது, பெரும் விசனத்துக்கு உரியதாகும்.

அரசியல் கட்சி ஒன்று அல்லது வேட்பாளர் ஒருவர் தமது எதிரணியினரை சாடுவது, கண்டிப்பது, தூற்றுவதை நாகரீகமாகக் கொள்ள முடியாது என்று கருதும் தேர்தல் விதி —

அரசியல் கட்சி அல்லது வேட்பாளர் சிறுபான்மை இனங்களின் பெயர் குறிப்பிட்டுத் தூற்றவும், தூஷிக்கவும், கண்டிக்கவும் அனுமதிக்கிறது!

''சிங்கள பூமிபுத்ரை'' கட்சியின் பிரதிநிதி, நேற்று முன்தினம் திங்கட்கிழமை அரச தொலைக்காட்சியில் ஆற்றிய தேர்தல் உரை அதனையே உறுதிப்படுத்துகிறது. பதினைந்து நிமிடமாக தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் எதிராக முழுக்க முழுக்க இனத்துவேசத்தையே அக்கட்சிப் பிரதிநிதி கக்கினார். ''கள்ளத்தோணி'' போன்ற மன உணர்வுகளைப் பாதிக்கும் வார்த்தைகளைக் கூட அவர் பயன்படுத்தினார்.

சனநாயக அரசியல் என்பது பல்வேறு கருத்துக்களுக்கு இடமளிக்கும் பண்பு உடையது. எழுத்துச் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம் என்பன வற்றை சனநாயக உரிமைகள் உறுதி செய்கின்றன என்பது உண்மை தான். ஓர் இனத்தைக் கண்டித்தும், தூற்றியும் இனவாதம் பேசியும் இனங்களுக்கு இடையே பகைமையை வளர்த்து மோத விடுவதும், இரத்தக் களரியை உண்டாக்குவதும் சனநாயகம் அல்ல. அது அடக்கு முறையையும், சர்வாதிகாரத்தையும் பிரதிபலிப்பதாகும்.

தேர்தல் பிரசாரத்தில் இனவாதம் கக்குவதற்கும், இனத்துவேசத்தைத் தூண்டுவதற்கும் தேர்தல் விதி அனுமதிக்கிறது என்றால் அதன் அர்த்தம்தான் என்ன?

இனவாதம், இனத்துவேசம் இனப்பகைமை என்பவற்றை வளர்த்து பெரும்பான்மை, சிறுபான்மை இனங்கள் மோதிக்கொண்டு இரத்தக் களரி தொடர வேண்டும் என்பதே சிங்களத்தின் விருப்பம்? ஸ்ரீலங்காவின் அரசியல்வாதிகள், அதிகாரிகள் என்று எவருமே சிறுபான்மை இன மக்கள் உரிமைகளுடனும் கௌரவத்துடனும் வாழ்வதை விரும்பவில்லை, அதனை அனுமதிக்கப்போவதில்லை. இனவாதம் இழக்க முடியாத பெரும் சொத்து என்று சிங்கள நாடு கருதுகிறது!

ஸ்ரீலங்காவின் அரசியலே இனவாதமாக இருக்கும் போது அதனைப் பேசுவதற்குக் கட்டுப்பாடும், தடையும் எப்படி விதிப்பது? இதுவே ஒட்டு மொத்தமான அர்த்தமாகும்! இலங்கை ஒரு நாடாக இருக்கும்வரை இனத்துவேசம் கைவிடப்பட மாட்டாது என்பது நிச்சயம்!

# 6 ஆயிரம் பயிலுநர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கக் கோரிக்கை

கொழும்பு, ஓக. 3

நாட்டிலுள்ள சகல பயிலுநர் ஆசிரியர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டும்.

அகில இலங்கை ஐக்கிய பயிற்சி ஆசிரியர் சங்கம் மேற்கண்டவாறு அரசாங்கத்தைக் கோரி உள்ளது.

நாட்டில் உள்ள பல்வேறு தமிழ், முஸ்லிம், சிங்களப் பாடசாலைகளிலும் 1990ஆம் ஆண்டில் இருந்து 6 ஆயிரம் பயிலுநர் ஆசிரியர்கள் நிரந்தர நியமனம் இன்றி கடமையாற்றி வருகிறார்கள் என்று பிரஸ்தாப சங்கம் அரசாங்கத்துக்கு சுட்டிக்காட்டி உள்ளது.

கொழும்பு விகார மகா தேவி பூங்காவில் உள்ள மண்டபத்தில் நடைபெற்ற இச்சங்கத்தின் வருடாந்த தேசியக் கூட்டத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பயிலுநர் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

கூட்டத்துக்கு சங்கத்தின் தலைவர் யக்வெல பஞ்ஞாசேகர தலைமை வகித்தார்.

அவர் கூட்டத்தில் உரை நிகழ்த்துகையில் எமது கோரிக்கையை அரசாங்கம் ஏற்று நியமனம் வழங்கும் போது, பட்[illegible] நான்கு வருட சேவைக்காலம் ஓய்வூதியக் கணிப்பீட்டில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என்றார்.

அரசாங்கம் அமுல் [illegible] தப்போவதாக அறிவித்துள்ள உதவி ஆசிரியர் சேவைத் திட்டத்தை காலம் தாழ்த்தாது நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் —

கல்வித்தரத்துக்கு ஏற்பவும் சேவை மூப்புக்கு ஏற்பவும் சகலருக்கும் சம சம்பளம் வழங்கப்பட வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்தார். (இ)

## கிளிநொச்சியில் நடந்த வன்னி விளையாட்டு விழா

### 5 ஆயிரம் வீரர்கள் பங்கு பற்றினர்

கிளிநொச்சி, ஓக. 3

வன்னி மாவட்ட ஐக்கிய விளையாட்டுச் சபை நடத்திய வன்னி விளையாட்டு விழா நிகழ்வுகள் கிளிநொச்சி பொது விளையாட்டுத் திடலில் கடந்த 21ஆம் திகதி வியாழன் தொடக்கம் 24ஆம் திகதி ஞாயிறு வரை வெகு கோலாகலமாக நடைபெற்றது.

5,000க்கு மேற்பட்ட வீரர்கள், வீராங்கனைகள் கலந்து கொண்ட இந்த விழா தொடர்ந்து 4 நாட்கள் பகல் இரவு மின் ஒளியில் மைதானம் நிறைந்த ரசிகர்களின் மத்தியில் நடைபெற்றது.

விளையாட்டுத் திடலில் ஒரே நேரத்தில் மெய்வல்லுநர் நிகழ்வுகள் இடம்பெற்றுக் கொண்டிருந்த அதே வேளை காற்பந்து, வலைப்பந்து, கிளித்தட்டு, பூப்பந்து, கரம் போன்ற பல நிகழ்வுகளும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த விழாவினை முன்னிட்டு கிளிநொச்சி நகரம் விழாக்கோலம் பூண்டு, எங்கும் விளையாட்டு வீரர்கள் மயமாகக் காணப்பட்டது.

## ஆனையிறவில் காவியமான வேங்கைகளுக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம் ஓக. 3

ஆனையிறவு இராணுவ முகாம் மீது நடத்தப்பட்ட ஆகாய கடல்வெளி இராணுவ நடவடிக்கையில் வீரச்சாவடைந்து — வீரகாவியம் படைத்த — வேங்கைகளின் 3ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்ச்சிகள் கடந்த ஞாயிறு மாலை கொடிகாமத்தில் உள்ள மாவீரர் நினைவாலயத்தில் உணர்வுபூர்வமாக நடைபெற்றன.

தென்மராட்சிக் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. கலைவாணன் தலைமையில் நடந்த அந்த நிகழ்ச்சியில் மாவீரர்களின் உருவப் படங்களுக்கு அவர்களது பெற்றோர்களும், உறவினர்களும் போராளிகளும் சுடர் ஏற்றி மலர்மாலை அணிவித்தனர்.

நினைவாலயத்தில் உள்ள நினைவுக் கல்லுக்கு யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி ஈகைச்சுடரேற்றி மாலை அணிவித்தார்.

பின்னர் அங்கு இடம்பெற்ற நினைவஞ்சலிக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் பலர் உரையாற்றினர். இறுதியில் கலை பண்பாட்டுக் கழகத்தின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ஐ-31-117)

## வவுனியா சம்பவத்தில் தமிழரும் காயமடைந்தார்

கொழும்பு, ஓக 3

வவுனியா ரயில் நிலைய வீதியில் உள்ள ரயில்வே கடவைக்கு அருகில் கடந்த புதன் இரவு 8.30 மணியளவில் இடம்பெற்றதாகக் கூறப்படும் கிரனேட் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் பாண்டியன் (வயது 42) என்பவரும் காயமுற்றார். இவர் தற்போது வவுனியா ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வான் ஒன்றில் வந்தோர் இந்த கிரனேட்டை வீசிவிட்டுச் சென்றதாகக் கூறப்பட்டது.

இச்சம்பவத்தில் பெரமுன (வயது 34), சுபரத்ன (வயது 28) குணசிறி (வயது 30) ஆகிய மூன்று பொலிஸாரும் ஜயவர்த்தன (வயது 26) என்ற சிங்களவரும் காயமுற்றனர்.

பொலிஸார் மூவரும் உடனடியாக அநுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். (உ)

### வலி. மேற்கில்

## முகாம குடிசைகளின் புனரமைபபு ஆரம்பம்

அராலி, ஓக. 3

புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் நிதி உதவியுடன் வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவில் அமைக்கப்பட்டுள்ள இடம் பெயர்ந்தோர் முகாம் குடிசைகளைப் புனரமைக்கும் வேலைகளை போயூட் நிறுவனம் மேற்கொள்ளவுள்ளது.

புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு இப்பகுதிக்கு மேற்படி பணிகளுக்காக இவ்வாண்டு ஒதுக்கியுள்ள ஒன்றரை இலட்சம் ரூபா பணத்தைக் கொண்டு குடிசைகளில் வாழும் மக்களின் பங்களிப்புடன் மேற்படி வேலைகளை செய்து முடிக்க போயூட் நிறுவனத்தினரும் வலி மேற்கு பிரதேச செயலரும் ஒத்துக் கொண்டதற்கு அமைய புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (க-12)

## கர்ப்பிணிப் பெண்களுக்கு ஜீவாகாரம் விநியோகம்

வலிகாமம் தெற்கு ஓக 3

வலிகாமம் வடக்கு-தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் பிரிவினரால் இப்பகுதியைச் சேர்ந்த கர்ப்பிணிப் பெண்களுக்கு ஜீவாகாரம், போஷாக்குணவாக வழங்கப்பட்டு வருகின்றது.

அளவெட்டி, மல்லாகம் பகுதிகளில் வைத்து சுமார் 300க்கு மேற்பட்ட கர்ப்பிணிப் பெண்களுக்கு இதுவரை ஜீவாகாரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் —

வலி-வடக்கு தெல்லிப்பழை உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்ட கர்ப்பிணிப் பெண்கள் தற்சமயம் இடம் பெயர்ந்திருந்தாலும் அவர்களுக்கும் ஜீவாகாரம் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-152)

### தெல்லிப்பழை

## துர்க்கை அம்மன் உற்சவம் குறித்து அரசுக்குத் தகவல்

யாழ்ப்பாணம், ஓக. 3

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோயிலின் வருடாந்த உற்சவம் குறித்து துர்க்கை அம்மன் கோயில் நிர்வாகத்தினரால் செஞ்சிலுவைச் சங்க சர்வதேச குழுவின் யாழ். அலுவலகப் பிரதிநிதி ஊடாக பாதுகாப்பு அமைச்சிற்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஒன்பதாம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 19ஆம் திகதி வரை நடைபெற உள்ள கோயிலின் உற்சவ காலத்தின் போது கோயில் சுற்றாடலில் விமானத் தாக்குதலைத் தவிர்க்குமாறும் கோரப்பட்டுள்ளது.

## பயிலுநர் ஆசிரியருக்கு நிரந்தர நியமனம்

யாழ்ப்பாணம், ஓக 3

சண்டிலிப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலைகளில் கற்பிக்கும் 72 பயிலுநர் ஆசிரியர்களுக்கும் தெல்லிப்பழைக் கல்விக் கோட்டப் பாடசாலைகளில் கற்பிக்கும் 74 பயிலுநர் ஆசிரியர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளது.

இதற்கான கடிதங்கள் கோட்டப் பணிமனையில் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுக்கு வழங்கப்படுவதாகக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு த. துரைசிங்கம் அறிவித்துள்ளார். (ஓ)

## அகதி முகாம் புனரமைப்பு

அராலி, ஓக. 3

சங்கானை பிரதேசத்திலுள்ள மூன்று அகதி முகாம்கள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

தொப்பு, ஓட்டக்கரை, வைரவர் குடியிருப்பு ஆகிய முகாம்கள் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதால் இவற்றை உடன் புனரமைப்புச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. (எ-100)

## சைக்கிள் போக் உடைந்து குடும்பஸ்தர் பலி

சைக்கிளில் சென்று கொண்டிருந்தவேளை திடீரென சைக்கிளின் ''போக்'' உடைந்ததால் கீழே விழுந்து படுகாயமடைந்த குடும்பஸ்தர் ஒருவர் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுப் பின் அங்கு மரணமானார்.

திருவையாறு பகுதியில் கடந்த வாரம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அவ்விடத்தைச் சேர்ந்த 5 பிள்ளைகளின் தந்தையான ஜெயராசா என்பவரே உயிரிழந்தார். (ஐ-79)

## முதலாவது மாணவிக்கு பரிசு

தென்மராட்சி, ஓக. 3

கைதடி முத்துக்குமார சுவாமி வித்தியாலயத்திலிருந்து முதன் முதலாக பல்கலைக் கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட செல்வி கோபாலபிள்ளை கேதாரகௌரிக்கு அமரர் ஆ. சின்னையா நினைவுப் பரிசிலை அன்னாரது மகன் திருமதி செ. இரத்தினசபாபதி கடந்த வாரம் வழங்கினார்.

## புலிகளின் குரல் வானொலியில்

03 - 08 - 1994
புதன் இரவு

- ★ 8-01 — ''குயிலோசைகளத்தில் காதிகான்''
- ★ 8-20 — எழுமலை ''வேம்பிலிருந்து நாசினிகள்''
- ★ 8-30 செய்திகள்
- 8-40 — நாடகம் ''காணி நிலம் வேண்டும்''

04 - 08 - 1994
வியாழன் காலை

- ★ 7-02 மாவீர வணக்கம்
- ★ 7-15 — விடுதலை கீதங்கள்
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40 — விடுதலை கீதங்கள் தொடர்ச்சி

### மட்டக்களப்பில் ஜனாதிபதி

## குண்டு துளைக்காத கூண்டிலிருந்து உரை

கொழும்பு, ஓக 3

கடந்த வாரம் தேர்தல் பிரசாரத்துக்காக மட்டக்களப்புக்கு விஜயம் செய்த ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவுக்கு கடும் பாதுகாப்புக்கள் வழங்கப்பட்டிருந்தன.

மட்டக்களப்பு காந்தி சதுக்கத்தில் கடந்த 26ஆம் திகதி நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் ஜனாதிபதி உரை நிகழ்த்துகையில் குண்டு துளைக்காத கண்ணாடிக் கூண்டிலிருந்து உரை நிகழ்த்தினார்.

ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் பி. சத்தியமூர்த்தி இராஜன் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

ஜனாதிபதி, கூட்டத்தில் பேசுகையில், வடக்கு — கிழக்கு பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண, மீண்டும் ஆட்சி அமைக்கும் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்று கூறினார். (இ)

## 5 ஆயிரம் பனம் விதைகள் அராலியில் நடப்படும்

அராலி, ஓக. 3

இவ்வருடம் வலி மேற்கு பிரதேச சபா பிரிவிலுள்ள அராலி கிராமத்தில் பெரும் எண்ணிக்கையான பனம் விதைகளை நடுவதற்கு பிரதேச செயலர் நடவடிக்கை எடுத்துள்ளார். தமிழ்ழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன தென்னை வளவள அபிவிருத்தி பகுதியினர் இப்பகுதியில் நடுவதற்கு தேவையான பனை விதைகளை வழங்குவதற்கு சம்மதம் தெரிவித்ததை தொடர்ந்து அராலி மேற்கு, மத்தி கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் மட்டும் 5,000 பனம் விதைகளை நடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் இவ்வாண்டு ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவிலும் மரக்கன்றுகளை நட்டு அவற்றை பராமரித்து வளர்ப்பதற்கும் பிரதேச செயலகம் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது. ஓ 12

## நெற்பயிர் காப்புறுதி திட்டம் இந்த ஆண்டு அமுலில்

யாழ்ப்பாணம், ஓக 3

நெற்பயிர் விவசாயிகளின் நன்மை கருதி நஷ்ட ஈடு வழங்கும் திட்டம் ஒன்று சமதொழில் காப்புறுதி சபையால் இவ்வாண்டு முதல் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

இதன்படி ஏக்கர் ஒன்றிற்கு 200 ரூபா தவணைப் பணமாகக் கட்டும் விவசாயிக்கு இழப்பீடாக 4,000 ரூபாவும் 140 ரூபா தவணைப் பணமாக கட்டும் விவசாயிக்கு இழப்பீடாக 2,800 ரூபாவும் வழங்கப்படும்.

எதிர்வரும் காலபோகத்தில் நெற்பயிர் காப்புறுதி செய்ய விரும்பும் விவசாயிகள் இத்திட்டத்தின் கடைசி விதைப்பு திகதிக்கு முன் கட்டுப்பணத்தை நெற்காணி அமைந்துள்ள கமநல சேவை நிலையத்தில் செலுத்தலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-4)

### ஜெய்ப்பூர் அவயவப்பாவனையாளருக்கு

## சுயதொழிலை ஊக்குவிக்கும் கடன்திட்டம் விஸ்தரிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 3

ஜெய்ப்பூர் அவயவப் பாவனையாளருக்கு ஜெய்ப்பூர் செயற்கைக்கால் திட்ட கொழும்பு நட்புறவுச் சங்கம், யாழ். இணையினால் வழங்கப்பட்டு வரும் சுயதொழில் ஊக்குவிப்புக் கடன் திட்டம் மேலும் விஸ்தரிக்கப்படுகிறது.

புதிதாக மேலும் 15 பேருக்கு இக்கடன் வழங்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

அங்கவீனமுற்றோர் பிறரிலே தங்கியிருக்காமல் தமது குடும்பத்திற்கும் தாம் வாழும் சமூகத்திற்கும் பயனுள்ளவர்களாக இருக்கின்றோம் என்ற புத்துணர்வை ஏற்படுத்தும் நோக்கிலேயே இக்கடன் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக ஜெய்ப்பூர் ஸ்தாபனத்தின் யாழ் இணையின் திட்டப் பணிப்பாளர் திருமதி நி. யோநாதன் தெரிவித்தார். (ஓ-4)

## உணவுத் தயாரிப்பாளர் பிரச்சினைகள் ஆராய்வு

யாழ்ப்பாணம், ஓக. 3

யாழ். குடாநாட்டில் மென்பானம், பழரசம், இனிப்பு வகைகள், அச்சாறு அவல், வெல்லம், ஜாம் போன்ற உணவுப் பண்டங்கள் தயாரிப்பில் ஈடுபட்டிருக்கும் உற்பத்தியாளர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் ஒன்று அண்மையில் தொழில்துறை மேம்பாட்டு நிறுவனத்தில் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் உற்பத்தியாளர்களின் பிரச்சினைகள் குறிப்பாக மூலப் பொருள்களை பெறுவதிலுள்ள இடர்பாடுகள், அவற்றின் தரம், உற்பத்திப் பொருள்களின் தரம், சந்தைப்படுத்தலில் எதிர்நோக்கும் கஷ்டங்கள், தரநிர்ணயத்தை அமுலாக்குவதனால் எழுந்துள்ள பிரச்சினைகள் என்பன பற்றி விரிவாக ஆராயப்பட்டது. உற்பத்தியாளர்கள் தங்களின் உற்பத்திப் பொருள்களை சந்தைப்படுத்தும் பொழுது கட்டாயமாக கடைப்பிடிக்க வேண்டிய முறைகள் பற்றியும் விரிவான விளக்கம் அளிக்கப்பட்டது.

இக் கலந்துரையாடலில் கலந்து கொள்ளாத உற்பத்தியாளர்கள் தொழில்துறை மேம்பாட்டு நிறுவனத்துடன் உடனடியாக தொடர்பு கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர். (ஏ)

## சாவகச்சேரிப் பகுதியில் விசர்நாய் நோய் தடுப்பூசி

தென்மராட்சி, ஓக. 3

வளர்ப்பு நாய்களுக்கான விசர்நோய்த் தடுப்பூசி மருந்துகள் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு வந்துள்ளன.

நாளை 4ஆம் திகதி தொடக்கம் 26ஆம் திகதி வரை சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள எட்டு இடங்களில் வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றப்படும்.

நாளை 4ஆம் திகதி வரணி தாவளை இயற்றாலையிலும் —

5ஆம் திகதி கச்சாய் ஆம்பன் கோவிலடியிலும் —

8ஆம் திகதி மட்டுவில் மகா வித்தியாலய அருகிலும் —

12ஆம் திகதி நுணாவில் கிழக்கிலும் —

15ஆம் திகதி கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூக நிலையத்திலும் —

18ஆம் திகதி மிருசுவில் உசன் ச.ச. நிலையத்திலும் —

22ஆம் திகதி கச்சாய் கிராம சபை மண்டபத்திலும், —

26ஆம் திகதி சாவகச்சேரி கச்சாய் வீதி சனசமூக நிலையத்திலும் — தடுப்பூசி ஏற்றப்படுமென சுகாதார வைத்திய அதிகாரி தா. சிவபாதம் அறிவித்துள்ளார். (இ-117)

## கிளிநொச்சியில் ஆசிரிய நியமன கடிதங்கள்

கிளிநொச்சி, ஓக. 3

கிளிநொச்சி கல்வித் திணைக்களத்தின் கரைச்சி கல்விக்கோட்டத்தில் கடந்த 4 ஆண்டுகள் கடமையாற்றிய 31 பயிலுநர் ஆசிரியர்களுக்கும் நிரந்தர ஆசிரிய நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன.

கிளிநொச்சியின் ஏனைய கல்விக் கோட்டங்களான கண்டாவளை, பூநகரி, பளை ஆகியவற்றின் பயிலுநர் ஆசிரியர்களுக்கும் முல்லைத்தீவு மாவட்ட புதுக்குடியிருப்பு கல்விக் கோட்டத்தின் 61 பயிலுநர் ஆசிரியர்களுக்கும் விரைவில் நியமனக் கடிதங்கள் வழங்கப்படவுள்ளன. (க-76)

## 'சுதந்திரபறவைகள்' வெளிவருகிறது

யாழ்ப்பாணம், ஓக 3

விடுதலைப்புலிகள் மகளிர் அமைப்பின் அதிகாரபூர்வ ஏடான சுதந்திரப் பறவைகள் இதழின் ஆடி மாத வெளியீடு இன்று 3ஆம் திகதி வெளிவருகிறது. (ஏ)

## வீரச்சாவு

யாழ்ப்பாணம், ஓக. 3

பூநகரிப் பகுதியில் கடந்த சனியன்று படையினருடன் ஏற்பட்ட மோதலில் விடுதலைப்புலிகள் இயக்கப் போராளியான லெப்டினன்ட் உலகப்பன் அல்லது சாம்ராஜ் (இராசநாயகம் ஜூட் அன்ரனி — குருநகர்) என்பவர் வீரச்சாவடைந்தார். (உ-ஐ)

## பரிசளிப்பு விழா

மானிப்பாய், ஓக. 3

இணுவில் அரசினர் வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா அதிபர் திருமதி ம. குட்டித்தம்பி தலைமையில் கடந்த ஜூலை 1ஆம் திகதி நடைபெற்றது.

இக் கல்லூரியின் ஸ்தாபகரும் முன்னாள் முதல் அதிபருமான திரு. இ. வல்லிபுரமும் அவருடைய பாரியாரும் விழாவின் பிரதம விருந்தினராகவும் உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. வி. இராசையா, பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் திரு. வி. பரமானந்தம் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொண்டார்கள். (ட-90)

## இன்று

கிள்னர் மண்டப பரிபோருபாளர் பாடசாலையின் வருடாந்த கலைவிழா இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும். (ஏ)

★ ★ ★

தெல்லிப்பழை, சண்டிலிப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலைகளின் அதிபர்கள் கூட்டம் இன்று புதன்கிழமை பி. ப. 2 மணிக்கு மானிப்பாய் இந்துக்கல்லூரியில் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. த. துரைசிங்கம் தலைமையில் நடைபெறும். (ஓ)

★ ★ ★

ஆண்டு 5 ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையின் பரீட்சை நிலைய மேற்பார்வையாளர்களாக கடமையாற்ற நியமிக்கப்பட்டுள்ளவர்கள் அனைவரும் தத்தமது கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர்களை இன்று (புதன்) பிற்பகல் 5 மணிக்கு சந்திக்குமாறு யாழ். வலயம் — I கல்விப் பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி தெரிவித்துள்ளார்.

★ ★ ★

தொண்டமானாறு வெளிக்கள நிலையத்தின் இளமன்றத்தினரின் கூட்டம் இன்று புதன்கிழமை பிற்பகல் 1 மணிக்கு நடைபெறும். (ஏ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ. தே. கவுக்கு 110 இடங்கள்
# டி. பி. விஜேதுங்கா நம்பிக்கை

நாட்டின் பல பகுதிகளுக்கும் சென்று கருத்துக் கணிப்பு நடத்திய சுயேச்சையான குழுக்களின் அறிக்கைகளின் படி எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி 110 ஆசனங்களைக் கைப்பற்றும் என்று ஜனாதிபதி விஜேதுங்கா தெரிவித்திருக்கிறார்.

தமது நம்பிக்கைக்கு உரியவர்களிடம் அவர் இத்தகவலை வெளியிட்டார்.

மக்களின் அபிப்பிராயங்களை அறிந்து சொல்வதில் இரகசியப் பொலீஸாரும் அதை தேசிய உளவுப் பணியகம் ஆகியவற்றின் அறிக்கைகளில் தாம் தங்கியிருக்கவில்லை என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

1970, 77 தேர்தல்களின் அரச நிறுவனங்களின் அறிக்கைகளினால் "அப்போதைய பிரதமர்களான டட்லி சேனநாயக்கா, திருமதி பண்டாரநாயக்கா ஆகியோர் தவறாக வழிநடத்தப்பட்டனர் என்று தெரிவித்த ஜனாதிபதி விஜேதுங்க, அதன் காரணமாகத் தாம் சுயேச்சைக் குழுக்களை நாட்டின் பல பகுதிகளுக்கும் அனுப்பி மக்களின் மனநிலையை அறிந்திருப்பதாகவும்—

எதிர்வரும் தேர்தலில் குறைந்தது 110 ஆசனங்களை ஐக்கிய தேசியக் கட்சி பெறும் என்றும் ஜனாதிபதி விஜேதுங்க தமது சகாக்களிடம் தெரிவித்துள்ளார். (உ-எ)

## முஸ்லிம் காங்கிரஸின் அலுவலகம் தாக்கப்பட்டது!

மட்டக்களப்பு, ஓக. 3

கிழக்கு மாகாணத்தில் மருதமுனையில் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் அலுவலகம் கடந்த வெள்ளிக்கிழமை தாக்கப்பட்டது அங்கு நின்ற கட்சியின் பிரசார வாகனமும் தாக்குதலுக்கு இலக்காகி சேதமடைந்தது:

அலுவலகத்துக்கு முன்னால் நிறுத்தப்பட்டிருந்த சைக்கிள்கள் பலவும் அடித்து நொருக்கப்பட்டதாக முஸ்லிம் காங்கிரஸ் பேச்சாளர் ஜனாப் எம்.எம். அபுக்கலாம் தெரிவித்தார். (ஒ-3)

## இரு கைகளையும் இழந்த போதும்
## காலால் 'ரைப்' செய்து தமிழீழப் பெண் சாதனை;

யாழ்ப்பாணம், ஓக. 2

யாழ். ஜெய்ப்பூர் செயற்கைக்கால் நிறுவனத்தின் 7ஆவது ஆண்டு நிறைவு தினத்தன்று நடக்கப்பட்ட விளையாட்டு போட்டியில் இரண்டு கைகளையும் இழந்த இளம் பெண் ஒருவர் பெரும் சாதனை ஒன்றை நிலைநாட்டியுள்ளார்.

இந்தப் பெண் இரண்டு கைகளும் இன்றி வாயால் எழுதியும், காலால் "ரைப்" செய்தும் தமிழீழ ரீதியில் சாதனை படைத்துள்ளார்.

வெற்றிலைக் கேணியைப் பிறப்பிடமாக கொண்ட செபஸ்தியாம்பிள்ளை செல்வா (வயது 20) என்ற இளம் யுவதியே இந்தச் சாதனையைப் புரிந்தவர் ஆவார்.

"கைகள் இல்லாத போதும் காலாலும், வாயாலும் எனது அன்றாட வேலைகளைத் திறம்படச் செய்வேன்" என்ற உறுதிப்பாட்டை அந்த இளம்பெண் விளையாட்டு விழாவில் எடுத்து காட்டி அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தினார்

இராணுவ நடவடிக்கையின் போது ஷெல்லுக்கு இலக்காகி இவரின் இரண்டு கைகளும் துண்டிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-17)

## எதிரணி ஆதரவாளர் கொலை:
## அனுராதபுரம் பொலீஸில் மாகாண அமைச்சர் சரண்

கொழும்பு, ஓக. 3

அனுராதபுரம் தேவநம்பிய திஸ்ஸ புர என்னுமிடத்தில் அண்மையில் பொது மக்கள் ஐக்கிய முன்னணி ஆதரவாளரான திஸரட்ணவைச் சுட்டுக் கொலை செய்த சம்பவம் தொடர்பாக—

மாகாண அமைச்சர் எக்கநாயக்க மற்றும் மூவர் அனுராதபுரம் பொலீஸில் சரணடைந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

திஸரட்ணவைச் சுட்டுக் கொலை, ரிசர்வ் பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவரின் எஸ்-84 தானியங்கி ரைபிள் பயன்படுத்தப்பட்டுள்ளது என்றும்—

அந்த ரைபிள் உடனடியாக கைப்பற்றப்படும் என்றும் வட மத்திய பிராந்திய பிரதிப் பொலீஸ்மா அதிபர் காமினி ரத்தெனியா தெரிவித்தார்.

சம்பந்தப்பட்ட ரிசர்வ் கான்ஸ்டபிள் வட மத்திய மாகாணசபையின் அமைச்சர் ஒருவரின் உத்தியோகபூர்வ பாதுகாப்பு அதிகாரியாகப் பணிபுரிந்து வருபவர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-எ)

### எதிரணி ஆதரவாளர் கல்வீச்சில் மரணம்

கொழும்பு, ஓக. 3

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் ஊர்வலத்தில் கலந்து கொண்ட ஆதரவாளர் ஒருவர் கல் வீச்சுக்கு இலக்காகி மரணமானார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை குருநாகல் பன்னலையில் நடந்த ஊர்வலத்திலேயே இச்சம்பவம் இடம்பெற்றது.

இச்சம்பவம் தொடர்பாக இருவர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## மரண அறிவித்தல்கள்

### சரஸ்வதி சேனாதிராசா

அளவெட்டியை பிறப்பிடமாக கொண்ட திருமதி சரஸ்வதி சேனாதிராசா கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் திரு. ஆ. பு. சேனாதிராசா (இளைப்பாறிய அதிபர் சதானந்தா வித்தியாலயம் அளவெட்டி) அவர்களின் அன்பு மனைவியும், திருமதி மாலினி வசந்தகுமார், ஆனந்தசபாபதி (அண்ணன் - சுவிஸ்), செண்பகவரதன் (குட்டி - சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் திரு. இ. வசந்தகுமார் (ஆசிரியர், மானிப்பாய் மகளிர் கல்லூரி) அவர்களின் மாமியாரும், காலஞ்சென்ற சண்முகநாதன், சச்சிதானந்தன், ஜெகதீசன் ஆகியோரின் அன்பு சகோதரியும், செல்வராசாவின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் ஈமச்சடங்குகள் 02-08-94 (செவ்வாய்) கொழும்பில் நடைபெற்றன இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்
க. ஜெகதீசன்

டச்சு றோட்,
அளவெட்டி. (7571)

### கதிர்காமன் தேவாமிர்தசுந்தரம்
(வித்துவான்)

மின் அத்தியட்சகர் இலங்கை மின்சாரசபை - சுன்னாகம்)

சுன்னாகம் கதிர்காமன் தேவாமிர்தசுந்தரம் அவர்கள் நேற்றுக்காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிர்காமன் — அபிராமி தம்பதிகளின் அன்பு மகனும், இந்திராணியின் அருமைக் கணவரும், திலீபன் (சென். ஜோன்ஸ் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவன்), வானதி (உடுவில் மகளிர் கல்லூரி, உயர்தர வகுப்பு மாணவி), வாசுகி (உடுவில் மகளிர் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவி), பிரதீபன் (யாழ். இந்துக் கல்லூரி மாணவன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற சிவபாதசுந்தரம் (வலி - வடக்கு உதவி அரச அதிபர் பணிமனை), திருமதி S.T.N நாகரட்ணம் சிவகுருபராணி, திருஞானசுந்தரம் (சிங்கர் மெசின் கொம்பனி கொழும்பு), திருமதி மனோகரன் - பஞ்சாட்சரராணி ஆகியோரின் அன்பான சகோதரரும், திருமதி சிவபாதசுந்தரம்- நவமணி, காலஞ்சென்ற S. T. N. நாகரட்ணம் (தொழிலதிபர்), திருமதி திருஞானசுந்தரம் — மோகனருபராணி, ஐ மனோகரன் ஓய்வு பெற்ற உதவிக் கல்விப்பணிப்பாளர், சண்டிலிப்பாய் கல்விக் கோட்டம்) ஆகியோரின் அன்பான மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈறுக்கிரியைகள் இன்று (3-8-94) நண்பகல் அவரது இல்லத்தில் நடைபெற்று. பி. ப. 2.00 மணியளவில் பூதவுடல் சுன்னாகம் கொத்தியாவடி இந்து மயானத்துக்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்;
மனைவி, பிள்ளைகள்

டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம். (32217)

### திருமதி மரியாம்பிள்ளை புலோமினா
(செல்வராணி)

பொற்பதி குடத்தனையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி மரியாம்பிள்ளை புலோமினா (செல்வராணி) காலமானார். இவர் திரு. மரியாம்பிள்ளையின் அன்பு மனைவியும், தேவதாஸ் சுவிஸ்), மரியதீந்திரா, யோகதாஸ் (சுவிஸ்), லலிதா (டென்மார்க்), ஞானதாஸ் (டென்மார்க்), றஞ்சன் (கனடா), மனோகரி (டென்மார்க்), மனோகரன் (சுவிஸ்). உஷா (மாணவி திருக்குடும்பகன்னியர்மடம் யாழ்ப்பாணம்) சுதா, ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி தங்கேஸ்வரி திரு. ம. தேவரத்தினம் (M T R றான்ஸ்போட் உரிமையாளர்); திருமதி சாந்தி. திரு. சிவயோகஜெயம் (டென்மார்க்), செல்வராசா (டென்மார்க்) ஆகியோரின் அன்பு மாமியாரும், செல்வகே. றெஜி (செல்வரட்ணம்—மாட்டின் குருமடம் யாழ்ப்பாணம்) அன்பு பேர்த்தியாரும் ஆவார்

அன்னாரின் பூதவுடல் இன்று (3-8-94) காலை 8.00 மணி அளவில் குடத்தனை ச பேதுருவானவர் தேவாலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்ட பின் பொற்பதி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தகவல்
ம. தேவரத்தினம்
(மருமகன்)

பொற்பதி
குடத்தனை (32218)

## பட்டதாரி பயிலுநர்கள் 416 பேருக்கு உடன நியமனம்

யாழ்ப்பாணம், ஓக. 3

வேலையற்ற பட்டதாரிகளை பயிலுநர்களாக பதவிகளில் நியமிக்கும் அரசின் திட்டத்தின் கீழ் —

யாழ். மாவட்டத்தில் 416 பட்டதாரிகளுக்கு யாழ். மாவட்ட அரச திணைக்களங்களில் உடன் நியமனம் வழங்கப்பட்டிருக்கிறது.

யாழ் திட்டமிடல் பகுதியில் நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையில் தோற்றியவர்களில் 274 பேருக்கு அரச திணைக்களங்களில் நியமனம் வழங்கப்படும் என்றும் —

எஞ்சிய 142 பட்டதாரிகளுக்கும் கல்வி அமைச்சின் கீழ் நியமனம் வழங்கப்பட்டிருப்பதாகவும் —

யாழ், அரச அதிபர் அறிவித்துள்ளார்.

கல்வி அமைச்சின் கீழ் பாடசாலைகளில் நியமனம் பெறுவோர் ஆசிரியர்களாகவோ அல்லது முகாமைத்துவ அதிகாரிகளாகவோ நியமனம் பெறுவார்கள் என்பது குறித்த தகவல் ஏதும் கிடைக்கவில்லை என்றும் —

அவர்களுக்கான நியமனக் கடிதங்களை கல்வி அமைச்சு நேரடியாக அனுப்பும் என்றும் — தெரிவிக்கப்பட்டது,

மற்றைய 274 பேருக்கும் உரிய நியமன கடிதங்களை நாளை கொழும்பிலிருந்து வரும் அரச அதிபர் தம்முடன் எடுத்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

### அங்கமுத்து காலமானார்

பிரபல தென்னிந்திய தமிழ் நகைச்சுவை நடிகை அங்கமுத்து தமது 83 ஆவது வயதில் சென்னையில் நேற்று முன்தினம் காலமானார்.

ஊமைப்படக் காலத்திலிருந்து அவர் 800க்கு அதிகமான தமிழ்ப்படங்களில் நடித்திருக்கிறார். (உ-எ

## பாரபட்சமின்றி செயற்படுக!
## பொலீஸ் நிலையங்கள் முழுவதுக்கும் சிறிமா கடிதம்

கொழும்பு, ஓக. 3

பொறுப்புணர்ச்சியுடன் பாரபட்சமின்றி தேர்தல் காலத்தில் செயற்படும்படி பொதுமக்கள் ஐக்கிய முன்னணித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா நாட்டில் உள்ள பொலீஸ் நிலையங்கள் அனைத்துக்கும் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

"பாரபட்சமின்றிப் பணிபுரிவதற்குத் தவறின் மக்கள் சீற்றம் அடைவார்கள். எனவே பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் அவதானமாகச் செயல்பட வேண்டும்; மக்கள் தங்களுக்கு விருப்பமான ஆட்சியைத் தெரிவு செய்வதற்கு சுதந்திரமான தேர்தலை நடத்த நீங்கள் உதவ வேண்டும். இத்தேர்தல் உங்களுக்கு மட்டுமல்ல, உங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்தையும் நிர்ணயிப்பதாகவும் அமைகின்றது — என்றும் அவர் தமது கடிதத்தில் தெரிவித்திருக்கிறார். (உ-எ-6)

## இவ்வருடம் மாபெரும் விளையாட்டு விழா
## வெற்றி பெறும வலயங்களுக்கு தியாகி திலீபன் வெற்றிக் கேடயங்கள்

யாழ்ப்பாணம், ஓக. 3

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் இவ்வாண்டு மாபெரும் விளையாட்டு விழா நடத்தப்படவுள்ளது. இதில் நடனா விழாவுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப்போட்டிகள் வலய ரீதியாக நடத்தப்பட்டு அதில் வெற்றி பெற்றவர்கள் மாவட்ட போட்டிகளுக்கு தகுதி பெறுவார்கள்.

வலி. கிழக்கு வலயத்தில் கோப்பாய், நல்லூர், யாழ்ப்பாணம் பிரிவுகளும், வலி. மேற்கு வலயத்தில் சங்கானை, சண்டிலிப்பாய், தெல்லிப்பளை உடுவில் பிரிவுகளும், தென்மராட்சி வலயத்தில் தென்மராட்சி தீவகப் பிரிவுகளும், வடமராட்சி வலயத்தில் கரவெட்டி, பருத்தித்துறை, மருதங்கேணிப் பிரிவுகளும் பங்குபெறுகின்றன. இதில் வெற்றிபெறும் வலயங்களுக்கு தியாகி திலீபன் நினைவுக் கேடயங்கள் வழங்கப்படவுள்ளது.

நடன போட்டிகளுக்கான விண்ணப்பங்களை அவ்வப் பிரிவு வட்ட விளையாட்டு இணைப்பாளர்களிடம், குழு ரீதியாக அல்லது தனிப்பட்ட ரீதியாக எதிர்வரும் 9 ஆம் திகதிக்கு முன்னதாக ஒப்படைக்குமாறு யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழு கேட்டுள்ளது. மேலதிக விவரங்களுக்கு செயலாளர், யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழு, யாழ். மாவட்டச் செயலகம், கோண்டாவிலில் தொடர்பு கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது. (ஓ)

## குண்டை வெடிக்கச் செய்து சிப்பாய் ஒருவர் தற்கொலை!

### ஏறாவூர் கிரானில் சம்பவம்

ஏறாவூர் கிரான் பகுதியில் இராணுவச் சிப்பாய் ஒருவர் தமது வயிற்றில் குண்டு ஒன்றை வெடிக்கச் செய்து தற்கொலை புரிந்து கொண்டார்.

காலையுடன் குளிப்பதற்குக் குளிக்கச் சென்ற இவர் இவ்வாறு தற்கொலை செய்து கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இவர் சென்ற ... திடீர் பெரும் வெடிச்சத்தம் கேட்டது என்றும் அதைத் தொடர்ந்து சிப்பாய்கள் அங்கு சென்று பார்த்தபோது தற்கொலை புரிந்தவரின் கைகள் துண்டித்து வீசப்பட்டும் வயிற்றுப்பகுதி சிதைந்து சிதறித் காணப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

... தற்கொலை செய்து கொண்டவர் ஆவார் (ஓ-க)

## பண்ணைக் கடலில் படையினர் சூட்டுக்கு இருவர் உயிரிழப்பு

### நேற்று அதிகாலை சம்பவம்

பண்ணைக் கடலில் நேற்று அதிகாலை 12.30 மணியளவில் ஸ்ரீலங்காப் படையினர் நடத்திய தாக்குதலில் மீனவர்கள் இருவர் உயிரிழந்தனர். மற்றொருவர் சிறு காயத்துடன் தப்பி வந்தார்.

படையினர் தேடுதல் வெளிச்சம் பாய்ச்சி சரமாரியாக துப்பாக்கிப் பிரயோகம் நடத்தினர். அப்போது இரு மீனவர்களும் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தனர்;

துப்பாக்கி வேட்டு காதில் உராய்ந்து சென்றதால் மற்றொருவர் காயமடைந்தார். அவர் தப்பி கரை சேர்ந்துவிட்டார்.

குருநகர் தண்ணீர்த் தாங்கி வீதியைச் சேர்ந்த செல்வராசா அன்ரனி (28 வயது) என்ற நான்கு பிள்ளைகளின் தந்தையும்—

அதே இடத்தைச் சேர்ந்த ராசக்கோன் ஜஸ்ரின் (இந்திரன் - 20 வயது) என்பவருமே உயிரிழந்தவர்கள் ஆவர்.

உயிரிழந்த செல்வராசா அன்ரனி தமிழகத்துக்கு அகதியாகச் சென்று 1992 இல் இங்கு திரும்பி வந்தவர் என்று தெரிவிக்கப்பட்டது.

சபிரியல் ரஞ்சன் (27 வயது) என்பவரே காயத்துடன் தப்பி வந்தவர் ஆவார். (ஓ-17-51-15-4-13)

## ஆலயங்களில்

மலை கச்சார்வெளி வீரகத்தி விநாயகர் ஆலய சங்காபிஷேகம் நாளை காலை முதல் நடைபெறும்; (க-117)

* * *

சண்டிலிப்பாய் சீரணி அருள்மிகு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் கோயில் இலட்சார்ச்சனை இன்று காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகித் தொடர்ந்து 8 ஆம் திகதி திங்கட்கிழமை காலை பூர்த்தியடையும்.

9 ஆம் திகதி செவ்வாய் காலை 9- மணிக்கு ஆடிப்பூர உற்சவமும். மாலை 5.00 மணிக்கு கமலை பூசையும், இரவு அம்பாள் பூந்தண்டிகையில் வீதியுலா வருதலும் இடம்பெறும். (உ-30)

## வடமராட்சிப்...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

லும் மேற்கொள்ளப்பட்டது.

நேற்றைய பற்றிய நிலைமையால், ஜி. சி. ஈ. பரீட்சை எழுதிய மாணவர்கள் பெரும் குழப்பமடைந்து காணப்பட்டனர். சில மாணவர்கள் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னரே வினாத்தாள்களைத் கொடுத்துவிட்டுச் சென்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை—

வடமராட்சி கிழக்கு கடலில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்களை நோக்கி நேற்று அதிகாலை 3 மணியளவில் பிரங்கிப் படகிலிருந்து துப்பாக்கிப் பிரயோகமும் ஷெல் வீச்சும் நடத்தப்பட்டன.

இதனால் மீனவர்கள் இடைநடுவில் தமது படகுகள் வலைகளை கடலில் விட்டுவிட்டு கரைசேர்ந்தனர்.

சுமார் 40 நிமிட நேரம் தாக்குதல் நீடித்ததால் இப்பகுதிகளில் பதற்ற நிலை காணப்பட்டது.

ஷெல்கள் வத்திராயன், உடுத்துறைப் பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன.

(ஓ-155-173-89-177-11-30-51-13-15-17)


ECOLOM
மனோகரா சந்தி
அளவையியல்
95, 96
புதிய வகுப்புகள்
ஆரம்பம்
ஆரம்பம்: 04-08-1994
பிற்பகல் 4 மணி
ஆசிரியர்
A. பிரபாகரன்
(சி/8826)


## 50 ஆண்டுகளின் பின் ராஜஸ்தானில் மழை

ராஜஸ்தான், ஓக. 3

இந்தியாவின் ராஜஸ்தான் மாநிலத்தின் பர்மர் எனப்படும் மாவட்டத்தில் சுமார் 50 ஆண்டுகளின் பின்னர் முதல் முறையாக மழை பெய்துள்ளது.

இதனால் ஆச்சரியத்தில் மூழ்கிப்போன அம்மாவட்ட மக்கள் பல மணி நேரம் மழையிலேயே நனைந்து ஆனந்தக் கூத்தாடினார் என்று வெரித்தான் வானொலி தெரிவித்தது.

ராஜஸ்தான் பாலைவனத்திற்கு பெயர்போன மாநிலம் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-எ)

## பலாங்கொடையில் நடந்த
## ஐ. தே. க. கூட்டத்தில் 3 ஆயிரம் பேர் மட்டுமே
### எதிரணியின் கூட்டத்தில் 30ஆயிரம் பேர்!

கொழும்பு, ஓக. 3

பலாங்கொடையில் நேற்று நடந்த ஐ. தே. க. பிரசாரக் கூட்டத்தில் சுமார் 3 ஆயிரம் பேரே கலந்து கொண்டனர் என்றும் —

வீதி தடை செய்து போடப்பட்ட மேடையில் கூட்டம் நடந்ததன் காரணமாக பயணிகள் பெரும் சிரமத்தை அடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, கடந்த 29ஆம் திகதி பலாங்கொடையில் நடந்த பொதுமக்கள் ஐக்கிய முன்னணி பிரசாரக் கூட்டத்தில் 30 ஆயிரத்துக்கு அதிகமானோர் கலந்து கொண்டதை அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

## தேர்தல் முடிந்த கையோடு தொண்டா யாழ். வருவாராம்

கொழும்பு, ஓக. 3

"தேர்தல் முடிந்ததும் அமைச்சர் தொண்டமான் யாழ்ப்பாணம் சென்று விடுதலைப்புலிகளுடன் பேசுவதற்கு திட்டமிட்டுள்ளார்.

இந்து சமய கலாசார ராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மட்டக்குளியில் நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இலங்கையில் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணவேண்டும என்பதில் அமைச்சர் தொண்டமான் தொடர்ச்சியான பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்துள்ளார் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஓ-3)

## புக்காரா, ஹெலி வடமராட்சியில் நோட்டம்

வல்வெட்டித்துறை, ஓக. 3

வல்வெட்டித்துறை உட்பட வடமராட்சியின் பல பகுதிகள் மீது நேற்றுக் காலை 5 மணியளவில் புக்காரா விமானம் ஒன்று வட்டமிட்டு நோட்டமிட்டது. பின்னர் காலை 8 மணியளவில் பலாலி பக்கமிருந்து வந்த ஹெலி ஒன்றும் அப்பகுதிகளை பல தடவைகள் சுற்றி வட்டமிட்டது.

மக்கள் குடியிருந்த பகுதிகளில் இதனால் பதற்றம் ஏற்பட்டது.

## மரண அறிவித்தல்

### குருநாதர் சிவசுப்பிரமணியம் (பாலா)
(இளைப்பாறிய தொழில்நுட்ப உத்தியோகத்தர் நீர்ப்பாசனத் திணைக்களம்)

1 - 8 -94 இல் கொழும்பில் காலமான குருநாதர் சிவசுப்பிரமணியம் அவர்களின் ஈமக் கிரியைகள் 85/11 ஆனந்தம் வடலி றோட், கொழும்புத்துறை இல்லத்தில் நாளை 4 - 8 - 94 வியாழக் கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெற்று. பூதவுடல் துண்டி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்!
சி. மங்களேஸ்வரி (மங்களம்)
(மனைவி)
நயினாதீவு.

85/11. A. V. றோட்,
கொழும்புத்துறை, (32221)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 03 - 08 - 1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org